REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜூலை 13 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 163 | Wednesday 13, July, 2022 | 12பக்கங்கள் | 40/-

பெற்றோர் வெளிநாட்டில்;

## 09 வயது தங்கையை பாதுகாக்க முடியாது

லோரன்ஸ் செல்வநாயகம்

13 வயது சகோதரி தற்கொலைக்கு முயற்சி

தந்தையும் தாயும் தொழிலுக்காக வெளிநாடு சென்றதால் தமது பொறுப்பிலுள்ள 9 வயது தங்கையைப் பாதுகாக்க முடியாதுள்ளதாக தெரிவித்து 13 வயது மூத்த சகோதரி தற்கொலை செய்து 04

மருத்துவ வளங்கள் கையிருப்பில் பற்றாக்குறை

## வன்முறைகளிலிருந்து விலகி பொறுப்புடன் செயற்படுங்கள்

பாரிய சம்பவங்கள் ஏற்படின் சமாளிப்பது கடினம்

ஸ்ரீலங்கா மருத்துவ சங்கம் வேண்டுகோள்

பொலிஸ் மற்றும் ஆயுதப் படைகள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் பொறுப்புடன் செயற்படுமாறும் வன்முறையிலிருந்து விலகி இருக்குமாறும் ஸ்ரீலங்கா மருத்துவ சங்கம் (Srilanka Medical Association) கேட்டுக்கொண்டுள்ளது. நமது நாட்டின் சுகாதார சேவைகள் மிகக்குறைந்த அளவு வளங்களிலேயே 04

3700 மெ.தொன் எரிவாயுவுடன்

## மற்றுமொரு கப்பல் நாட்டை வந்தடைந்தது

தொடராக விநியோகிக்க துரித ஏற்பாடு



லிற்றோ எரிவாயு நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட 3,700 மெற்றிக் தொன் எரிவாயுவை கொண்ட மற்றுமொரு கப்பல் நேற்று (12) இலங்கையை வந்தடைந்ததாக லிற்றோ 04

எரிபொருள் கொள்வனவுக்கு:

## CPCக்கு திறைசேரி ரூ.100 பில்லியன் ஒதுக்கியுள்ளதாக செயலாளர் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு எரிபொருள் கொள்வனவுக்காக திறைசேரி மூலம் 100 பில்லியன் ரூபா நிதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன தெரிவித்துள்ளார். எரிபொருளுக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள 04

## பாணின் விலை 20 ரூபாவால் நள்ளிரவு முதல் அதிகரிப்பு

ஏனைய உற்பத்திகள் ரூ.10ஆல் உயர்வு



நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 450 கிராம் நிறையுடைய பாண் ஒன்றின் விலை 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தோடு ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த சங்கம் அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.



வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது. வசந்த மண்ட பூஜைகளை தொடர்ந்து, பிள்ளையார், முருக பெருமானுடன் உள்வீதியுலா வந்த நாகபூஷணி அம்மன் திருத்தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார். (படம்: யாழ்.விசேட நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய இன்று இராஜினாமா

# பதில் ஜனாதிபதி சபாநாயகரா? பிரதமரா? இன்று கடிதம் கையளித்த பின் தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியிலிருந்து இராஜினாமா செய்தவுடன் அச்சந்தர்ப்பத்தில் பிரதமர் பதவியை வகிப்பவர் உத்தியோகபூர்வமாக பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவாரென நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

அச்சந்தர்ப்பத்தில் பிரதமர் பதவி வெற்றிடமாகவிருக்குமானால் பாராளுமன்ற சபாநாயகர் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவாரென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய ஜனாதிபதி இன்றைய தினம் தமது பதவியை இராஜினாமா செய்த பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதம நீதியரசர் அல்லது உச்ச நீதிமன்றத்தின் எந்தவொரு நீதிபதியின் முன்னிலையிலும் அவர் பதில் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துகொள்ள முடியும். அதற்கு பிரதம நீதியரசர் அழைப்பு அவசியமில்லையென்றும் நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

பதில் ஜனாதிபதி ஒரு மாத காலத்துக்குள் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளின் மூலம் ஜனாதிபதி பதவிக்காக தெரிவுசெய்ய முடியும் என்பதுடன் அதற்காக அவர் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியான வாக்குகளில் 50% பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

ஜனாதிபதி பதவிக்காக இன்னுமொருவரது பெயர் முன்வைக்கப்படுமானால் அந்த வாக்கெடுப்பு முறையாக அமையுமென்றும் நீதியமைச்சர் தெரிவித்துள்ளார். அதன்போது குறைந்தளவு வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் வேட்பாளர் போட்டியிலிருந்து விலக்கப்பட்டு 1, 2, 3, 4 ரீதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட விருப்பு வாக்குகள் ஏனைய வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டு நூற்றுக்கு ஐம்பது கணக்கிடப்பட வேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். எவரும் 50% பெற்றுக்கொள்ளாவிட்டால் அதிக வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்படுவாரென்றும் வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்படும்போது அரசியல் கட்சி ரீதியில் அன்றி தனிநபர் என்ற ரீதியில் தெரிவுசெய்ய முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அவ்வாறு தெரிவுசெய்யப்படும் வேட்பாளர்களின் பெயர் பாராளுமன்ற உறுப்பினரொருவரால் முன்வைக்க முடியும். ஜனாதிபதி ஒருவரை தெரிவுசெய்வதற்காக பாராளுமன்ற 04



## இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து 1- 1/2 பில்.டொலர் கடன் உதவி

பேச்சுவார்த்தை நடைபெறுவதாக மத்திய வங்கியின் ஆளுநர் தகவல்



லோரன்ஸ் செல்வநாயகம்

இந்திய ரிசர்வ் வங்கியில் ஒரு பில்லியன் டொலரை பரிமாற்றம் செய்வதற்கு இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு 500 மில்லியன் டொலரை 04

ஜனாதிபதி மாளிகை, செயலகம், அலரி மாளிகை

## பொருட்களுக்கு சேதம், திருட்டு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரி மாளிகை ஆர்ப்பாட்டக்காரர்களினால் முற்றுகையிட்டதன் பின்னர் அங்கிருந்த பெறுமதியான பொருட்கள் மற்றும் பாரம்பரிய உபகரணங்கள் பல காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறான சில பொருட்கள் அங்கிருந்து வெளியில் எடுத்துச் செல்லப்பட்டமை தொடர்பான வீடியோக்கள் சமூக வலைத்தளங்கள் மூலம் பிரசாரப்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் அக்கட்டடங்களிலுள்ள குளியலறைகள் மற்றும் பல்வேறு 04

## 38 கிலோ ஹெரோயினுடன் தாயும் மகனும் நேற்று கைது

எம்பிலிப்பிட்டியவில் பொலிஸார் அதிரடி




எம்பிலிப்பிட்டிய பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண்ணொருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

39 கிலோ ஹெரோயின் போதைப்பொருளுடன் 46 வயதுடைய பெண்ணொருவரும் 22 வயதுடைய அவரது மகனுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். 04

பொருள் கொள்வனவுக்கு வந்தவர்

## திடீர் சுகவீனமுற்று மரணம் கொட்டாவை நகரில் சம்பவம்

லோரன்ஸ் செல்வநாயகம்



கொழும்பு, கொட்டாவை நகருக்கு தனது மகனுடன் காரில் வந்த தந்தையொருவர் நேற்று 12ஆம் திகதி திடீர் சுகவீனமுற்று உயிரிழந்துள்ளதாக கொட்டாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொட்டாவ லியனகொடவில் வசித்த மின் பொறியியலாளரான 04

## SLPP முக்கிய தலைவர்கள் அனைவரும் நாட்டிலேயே!

எவருமே வெளியேறவில்லை என்கிறது கட்சி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எந்த ஒரு தலைவரும் நாட்டைவிட்டு வெளியேறவில்லை என அக்கட்சி அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியத் தலைவர்கள் நாட்டைவிட்டு வெளியேறியதாக சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்திகள் மற்றும் காணொளிகளில் உண்மைக்கு 04

எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாத நிலையில் நாடு:

## மீளக்கட்டியெழுப்ப சஜித் தலைமையில் SJB தயார்

திஸ்ஸ அத்தநாயக்க MP தெரிவிப்பு



நாடு இன்று எந்த கட்டுப்பாடும் இல்லாத நிலையை அடைந்துள்ளது. அரசியல் ஸ்திரத்தன்மை, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை மீளக்கட்டியெழுப்ப சஜித் பிரேமதாச தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி பொறுப்புடன் செயல்படும் என 04



## உலகளவில் விமானங்களின் கட்டணங்கள் அதிகரிக்கும்

சர்வதேச விமான போக்குவரத்து சங்கம் 03

சட்டவிரோதமாக படகில் அவுஸ்திரேலியா செல்கையில்

## புயலில் சிக்கி ஆழ்கடலில் தத்தளித்த 55 பேர் 04 நாட்களின் பின் மீட்பு

ஹம்பாந்தோட்டை கடற்பரப்பில் கடற்படையினர் உதவிக்கரம்





ஹம்பாந்தோட்டையிலிருந்து 390 கடல் மைல் தொலைவில் (722 கிலோமீட்டர்) இலங்கையின் தென்கிழக்கு ஆழ் கடலில் புயலில் சிக்கி மீன்பிடி இழுவைப்படகில் தத்தளித்துக் கொண்டிருந்த 55 பேர் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் சட்டவிரோதமாக ஆழ்கடல் வழியே அவுஸ்திரேலியா செல்ல முயற்சி செய்தவர்களென கடற்படையினர் தெரிவித்தனர். இந்த 55 பேரும் கடந்த 10 ஆம் திகதி மீட்கப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்று 12 ஆம் திகதி அதிகாலை ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு 04

போராட்டக்காரர்களின் பிடியிலுள்ள

## அலரி மாளிகையில் இரு குழுக்களிடையே மோதல்

லோரன்ஸ் செல்வநாயகம்



அலரி மாளிகையில் நேற்று அதிகாலை இரண்டு குழுக்களுக்கிடையில் மோதல் இடம் 04

ஒரு பெண் உட்பட 10 பேருக்கு காயம்

விமான நிலையத்தில் பணிப்புறக்கணிப்பு:

## நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு முயன்ற பசில் திரும்பி வந்தார்

லோரன்ஸ் செல்வநாயகம்




நாட்டிலிருந்து வெளியேறுவதற்காக முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ கொழும்பு விமானநிலையத்திற்கு சென்றவேளை அங்கு குடிவரவு குடியகல்வு பிரிவில் பணியிலிருந்தவர்கள் பணிப்புறக்கணிப்பு செய்ததால் அவருக்கு திரும்பி வர நேர்ந்தது.

முன்னாள் நிதியமைச்சர் இலங்கையிலிருந்து வெளியேறுவதற்காக கட்டுநாயக்க விமானநிலையத்திற்கு சென்ற 04

தொழிற்சங்க நடவடிக்கை:

## விமான நிலையத்தின் VIP பகுதி முடங்கியது



கட்டுநாயக்க விமான நிலையத்தின் (Silk Route/ CIP passenger) பட்டுப்பாதை மற்றும் வணிகரீதியில் முக்கியமான பயணிகள் பிரவேசிக்கும் பகுதியில் பணியாற்றுவதிலிருந்து தாம் மறு அறிவித்தல் வரை விலகியுள்ளதாக 04

## தமிழக முதல்வருக்கு கொரோனா தொற்று



தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலினுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

டாக்டர்களின் ஆலோசனைப்படி குமாரசாமி வீட்டில் அவர் தன்னை தனிமைப்படுத்தி கொண்டுள்ளார். தமிழகத்தில் அதிகரித்து வந்த கொரோனா தொற்று பரவல் கடந்த சில நாட்களாக குறைந்து வருகிறது. இந்நிலையில், 04

## சுமுகமான அதிகார மாற்றம் அவசியம்

ஐ.நா பொதுச்செயலாளர் வலியுறுத்து



இலங்கை அரசாங்கத்தின் சுமுகமான அதிகார மாற்றத்தை உறுதி செய்வதற்கும், நாட்டின் ஆழமான பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் கோரியுள்ளார். இந்தநிலையில், இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை 04

# சர்வதேச செய்திகள்

## அபேயின் இறுதிச்சடங்கில் பல்லாயிரம் பேர் பங்கேற்பு



சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள் ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச்சடங்கு நேற்று டோக்கியோவில் நடந்தது.

அபேக்கு மரியாதை செலுத்த ஆயிரக்கணக்கானோர் வீதிகளில் கூடினர். பலரும் கறுப்பு ஆடையில் வந்திருந்தனர். அபேயின் நல்லுடல் ஏந்திய வாகனம் ஆலயத்திலிருந்து கிளம்பும்போது, பலர் கைதட்டி, மலர்கள் தூவினர்.

அபே பிரதமராக இருந்தபோது நாட்டில் பாதுகாப்பு இருந்தது. அவர் இப்போது இல்லாதது எங்களுக்கு வருத்தமாக இருப்பதாக இறுதி மரியாதை செலுத்த வந்த ஒருவர் குறிப்பிட்டார். பாராளுமன்ற மேலவைத் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அன்று பேசிக்கொண்டிருந்த அபே சுடப்பட்டார். அவர் ஜப்பானில் அதிக காலம் பிரதமர் பதவியில் இருந்தவராவார்.

## பிரிட்டன் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்?



பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன்வைக்கப்படலாம் என்று தகவல்கள் கூறுகின்றன.

அந்நாட்டு எதிர்த்தரப்புத் தொழிற் கட்சி தீர்மானத்தை முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான வாக்கெடுப்பு இன்று புதன்கிழமை நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் வழி ஜோன்சனின் நிர்வாகம் தொடர வேண்டுமா என்பது முடிவெடுக்கப்படும்.

ஜோன்சனுக்கு எதிராகப் பெரும்பாலான வாக்குகள் பதிவானால் தேசியத் தேர்தல் நடைபெற அது வழிவகுக்கலாம். அடுத்த பிரதமர் செப்டம்பர் 5ஆம் திகதி அறிவிக்கப்படுவார் என்று கூறப்பட்டுள்ள நிலையில் இத்தகவல் வெளிவந்துள்ளது.

## ஒரு கொவிட் சம்பவத்தால் சீனாவில் நகருக்குப் பூட்டு



ஒரே ஒரு கொவிட்–19 தொற்றுச் சம்பவம் காரணமான சீனாவின் சிறு நகர் ஒன்றில் ஆயிரக்கணக்கானோர் பொது முடக்கத்திற்கு முகம்கொடுத்துள்ளனர்.

ஹுனான் மாகாணத்தில் உருக்கு உற்பத்தி மையமாக இருக்கும் வுகாங் நகரிலேயே கடந்த திங்கட்கிழமை புதிய தொற்றுச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. இதனை அடுத்து மூன்று நாட்களுக்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கையாக அந்த நகர் நெருக்கமாக அவதானிக்கப்படும் என்று அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்படி நாளை வியாழக்கிழமை வரை நகரில் இருக்கும் 320,000 பேரும் வீடுகளை விட்டு வெளியேற அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வேகமாக பரவும் ஒமிக்ரோன் திரிபினால் சீனாவில் கொவிட் தொற்று சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய வெளியுறவு அமைச்சர் பல தலைவர்களுடன் சந்திப்பு



இந்தோனேசியாவில் நடைபெற்ற ஜி20 வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டின்போது இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் நெதர்லாந்து மற்றும் கொரிய வெளியுறவு அமைச்சர்களை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதில் ஐரோப்பா மற்றும் இந்தோ பசிபிக் நிலைமை குறித்து நெதர்லாந்து வெளியுறவு அமைச்சர் வொப்கே ஹோக்ஸ்ட்ராவுடன் ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதன்போது அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டோனி பிளிங்கனை சந்தித்த ஜெய்சங்கர் சர்வதேச மற்றும் பிராந்திய விவகாரங்கள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். தொடர்ந்து ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லவ்ரோவுடன் உக்ரைன் பிரச்சினை உட்பட சர்வதேச மற்றும் பிராந்திய விவகாரங்கள் பற்றியும் இரு தரப்பு உறவுகள் பற்றியும் ஜெய்சங்கள் ஆலோசனை நடத்தியுள்ளார்.

## ஆரம்பகால பிரபஞ்சத்தின் தெளிவான படம் வெளியீடு



ஆரம்பகாலப் பிரபஞ்சத்தின் மிகத் தெளிவான வர்ணப் படத்தை ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கி வெளியிட்டுள்ளது. 13 பில்லியன் ஆண்டுக்கு முன் உள்ள பிரபஞ்சத்தின் தோற்றத்தை காண்பிக்கும் படமே வெளியிடப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான விண்மீன் மண்டலங்கள் தென்படும் அந்தப் படத்தை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்டார்.

ஸ்மக்ஸ் 0723 என்ற விண்மீன் மண்டலங்களை இந்தப் படத்தில் காணலாம். இந்தப் படத்தைத் தயாரிக்க 12.5 மணி நேரமானது. ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியால் பிரபஞ்சத்தினுள் இன்னும் ஆழமாகச் செல்லமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரபஞ்சம் தோன்றி 13.8 பில்லியன் ஆண்டுகள் ஆனதைக் கணக்கில் கொண்டு அப்போது தோன்றிய நட்சத்திரங்கள் மற்றும் அங்கு மனிதர்கள் வாழத் தகுதி கொண்ட கிரகங்களைக் கண்டறியும் முயற்சியாக கடந்த ஆண்டு விண்வெளியில் 10 பில்லியன் டொலர் செலவில் ஜேம்ஸ் வெப் ஸ்பேஸ் எனும் சக்திவாய்ந்த தொலைநோக்கியை நாசா நிறுவியது.

நட்சத்திரங்கள், துகள்கள் என சிதறிய ஒளிக்கதிர்களால் ஓவியம்போல காட்சியளிக்கும் இந்தப் படத்தைக் கண்ட பல விஞ்ஞானிகள் கிட்டத்தட்ட பிரபஞ்சத்தின் தோற்றத்தை நெருங்கி விட்டதாகவும் இது அறிவியல் உலகின் மகத்தான சாதனை எனவும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

## திருடுபோன 'இயேசு இரத்தம்' மீட்பு



இயேசுவின் இரத்தத் துளிகளைக் கொண்டிருப்பதாக நம்பப்படும் தங்கக் கலைப்பொருள் ஒன்று வடக்கு பிரான்ஸில் கடந்த மாதம் திருடப்பட்ட நிலையில் தற்போது மீட்கப்பட்டுள்ளது.

கிறிஸ்துவின் விலைமதிப்பற்ற இரத்தத்தை பார்ப்பதற்காக கடந்த 1,000 ஆண்டுகளாக நோர்மண்டியிலுள்ள பேகாம்ப் அபே தேவாலயத்திற்கு யாத்திரிகர்கள் வருகை தருகின்றனர். இந்த நினைவுச்சின்னம் கடந்த ஜூன் 1ஆம் திகதி தேவாலய அறையில் இருந்து திருடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. குறைந்த அளவு பாதுகாப்பு இருக்கும் நிலையிலேயே இது திருடப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த நினைவுச்சின்னத்தை மீட்டிருக்கும் திருடுபோன கலைப்பொருட்களை மீட்பதில் பிரபலம் பெற்ற ஆர்தர் பிரான்டன் அதனை பொலிஸாருக்கு திருப்பிக் கொடுத்துள்ளார்.

30 சென்டிமீற்றர் கொண்ட இந்தக் கலைப்பொருளின் உள்ளே இரு உலோக விளக்குகள் உள்ளன. அதில் இயேசு சிலுவையில் அறையப்படும்போது பெறப்பட்ட இரத்தத் துளிகள் இருப்பதாக நம்பப்படுகிறது.

பிரான்டன் இந்தத் திருடு பற்றி விசாரணை நடத்த ஆரம்பித்து சிறிது நாட்களில் அநாமதேய மின்னஞ்சல் மூலம் திருடன் அவரை தொடர்புகொண்டு தம்மிடம் திருடியபொருள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து தான் கைதாவதைத் தவிர்க்கும் வகையில் அந்தத் திருடன் நினைவுச்சின்னத்தை அட்டைப் பெட்டி ஒன்றில் அடைத்து பிரான்டனின் வீட்டு வாசலில் வைத்துச் சென்றுள்ளார்.

# வடக்கின் உதயம்



வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய வருடாந்திர தேர்த்திருவிழா நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது. படங்கள் யாழ்.விசேட நிருபர்

## சாவகச்சேரி சுகாதார பிரிவில் தொற்றாளர்கள் அடையாளம்

*சாவகச்சேரி விஷேட நிருபர்*

சாவகச்சேரி சுகாதார பிரிவுக்குட்பட்ட அல்லாரை மற்றும் கைதடிப் பகுதியில் கொரோனா தொற்றாளர்கள் இருவர் அடையாளம் காணப்பட்டிருப்பதாக சுகாதாரப் பகுதியினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தொற்றாளர்கள் இருவருக்கும் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் மற்றும் பீ.சி.ஆர் பரிசோதனையில் அவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். இவர்களை அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதேவேளையில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அசாதாரண நிலைமை காரணமாக பஸ், புகையிரதம் உள்ளிட்ட இடங்களில் ஏற்படுகின்ற நெரிசல் நிலைமையால் கொரோனா மேலும் தீவிரமடையக்கூடிய அபாய நிலை காணப்படுவதாக அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர். அத்துடன் வைத்திய சாலைகள், மருந்தகங்களில் பல மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன் மருந்தகங்களில் மருந்துப்பொருட்கள் பன்மடங்கு விலையேற்றம் அடைந்திருப்பதால் பாரிய சிக்கல் நிலைமை ஏற்படும் எனவும் மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

## மட்டுப்படுத்தப்பட்ட பசளை விநியோகம்

*பரந்தன் குறூப் நிருபர்)*

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பசளை கிடைத்துள்ளமை தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் விவசாயிகள் முறையிட்டுள்ளனர்.

நேற்று காலை 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரை இரணைமடு விவசாய சம்மேளத்தினர் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு 40 அந்தர் உரம் மாத்திரமே கிடைத்துள்ளது. ஏனைய விவசாயிகள் உரம் இல்லாது தவிக்கின்றனர். இந்நிலையில் அவர்களுக்கான உரத்தினை பெற்று கொடுக்க அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எரிபொருள் பிரச்சினை காரணமாக இந்த வருடம் விதைப்புக்கான காலம் பிந்தியது. இந்நிலையில் தற்பொழுது பசளைக்காக காத்திருக்கும் விவசாய நிலங்களுக்கு உரத்தினை பெற்று தருவதற்கு அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

## மன்னாரில் போக்குவரத்து வசதிகளின்றி மக்கள் அசௌகரியம்

*(தலைமன்னார் விஷேட நிருபர்)*

மன்னாரில் தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை பஸ் சபைகளுக்கிடையே நிலவிய முறுகல் நிலையால் போக்குவரத்து வசதிகளின்றி பெரும் சிரமங்களுக்கு மக்கள் உள்ளாகியுள்ளனர்.

செவ்வாய்கிழமை (12.07.2022) மன்னாரில் தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை போக்குவரத்து சேவையாளர்களுக்கிடையே இடம்பெற்ற முறுகல் நிலையால் போக்குவரத்து சேவைகளும் இடம்பெறவில்லை.

அதாவது மன்னார் இலங்கை போக்குவரத்து சபை சாலைக்கு டீசல் எரிபொருள் வரும் பட்சத்தில் இதில் தனியார் போக்குவரத்து சேவையினருக்கும் ஒரு பகுதி வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு காணப்பட்டபோதும் இது நடைமுறைப்படுத்தப்படாமையால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

## யாழ் - கண்டி நெடுஞ்சாலையை வழிமறித்து ஆர்ப்பாட்டம்

*யாழ். விசேட நிருபர்*

எரிபொருள் வழங்க கோரி யாழ்ப்பாணம் கண்டி நெடுஞ்சாலையை வழிமறித்து நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு அருகிலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நீண்ட நாட்களாக எரிபொருளுக்காக காத்திருந்தவர்களே வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இணைய வழியில் பதிவு செய்பவர்களுக்கே எரிபொருள் வழங்கப்படும் என மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் தெரிவித்தமையால் அங்கு நீண்ட நாட்களாக காத்திருந்த பொதுமக்களே வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## வெதுப்பக உற்பத்தியாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் விநியோகம்

*யாழ்.விசேட நிருபர்*

யாழ் மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருளை பெற்றுக்கொள்ள விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் சங்க தலைவர் மற்றும் பிரதிநிதிகள் யாழ்மாவட்ட செயலகத்திடம் வெதுப்பக உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதில் எரிபொருளை பெற்றுக்கொள்வதில் இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளதாகவும், தாம் எரிபொருளை பெற்றுக்கொள்ள ஏதுவாக நடவடிக்கைகளை எடுக்குமாறு முன்வைத்த கோரிக்கைக்கு தீர்வாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருளை பெற்றுக்கொள்ள விசேட ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார். வெதுப்பக உற்பத்தியாளர்கள் தங்களது வெதுப்பக சங்கம் ஊடாக தொடர்பு கொண்டு உற்பத்தி விற்பனையை தடையின்றி மேற்கொள்ள மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்சைகள் ஆரம்பம்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடாத்தப்படும் 2022 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சைகள் எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கான பாடங்கள் 15ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கும் இலக்கணம் 16 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு இலக்கியம் பிற்பகல் 1 மணிக்கு உரைநடை 17ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு சாத்திரம் பிற்பகல் 1 மணிக்கு வரலாறு பாடங்கள் என பரீட்சைகள் இடம்பெறவுள்ளன. பரீட்சை யாழ்ப்பாணம் நாவலர் மகாவித்தியாலயம் மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் மகா வித்தியாலயம் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆகிய நிலையங்களில் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தினை மாற்ற விரும்பின் எமக்கு உடனடியாக அறியத்தருவதுடன் பொருத்தமான பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்ற முடியும்.மேலதிக விபரங்களை 0777197067, 0779773538, 0776132176 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவித்துள்ளார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜுலை 13 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

11முதல் 18 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.39 |
| லுஹர் | 12.17 |
| அஸர் | 03.38 |
| மஃரிப் | 06.32 |
| இஷா | 07.48 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | முயற்சி |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | நன்மை |
| துலாம் | மறதி |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | செலவு |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)



சபை முதல்வரும், பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்தன, ஜப்பான் தூதரகத்துக்குச் சென்று ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தார். அத்துடன் தூதரகத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டிலும் தனது அனுதாபத்தை பதிவிட்டார்.



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று (12) ஜப்பானிய தூதரகத்தில் ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேக்கான இரங்கல் புத்தகத்தில் கையெழுத்திட்டார்.

## எல்லை தாண்டி மீன்பிடித்த இந்திய மீனவர் 6 பேர் கைது

வடக்கில் கோவிலன் கலங்கரை விளக்கத்திற்கு அப்பால் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 6 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

சர்வதேச கடல் எல்லைக் கோடு (IMBL) வழியாக, கோவிலன் கலங்கரை விளக்கத்திலிருந்து அவர்களை கண்டறிந்த பின்னர், வடக்கு கடற்படை கட்டளையுடன் இணைக்கப்பட்ட கப்பலை அனுப்பியதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இந்திய இழுவை படகுடன் ஆறு மீனவர்களும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டு, சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# மதசார்பற்ற, சிங்கள, தமிழ், முஸ்லிம் நாடாக இலங்கை அமைய வேண்டும்

## காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மத்தியில் மனோ கணேசன் தெரிவிப்பு



நாட்டின் இன்றைய நெருக்கடிக்கு மூல காரணம், தீர்க்கப்படாத இனப் பிரச்சினைதான். அதற்கு பதில் தேடாமல் இந்நாட்டின் நெருக்கடிகளுக்கு தீர்வு தேட முடியாது. இந் நாட்டை ஒரு இனத்துக்கும் , மதத்துக்கும் மாத்திரம் வரையறை படுத்த வேண்டாம். ஆகவே, இந்நாடு சிங்கள, தமிழ், முஸ்லிம், நாடாக வேண்டும். அதுபோல் மதசார்பற்ற நாடாகவும் வேண்டும். இந்த கருத்துகள் நாட்டின் அரசியலமைப்புக்குள், சட்ட வரையறைக்குள் வர வேண்டும். அப்போதுதான் இவற்றுக்கு சட்ட வலு கிடைக்குமென தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி கூறினார்.

காலிமுக போராட்டக்காரர்கள் அரசியல் கட்சிகளுடன் நடத்திய கலந்துரையாடலில் உரை நிகழ்த்திய மனோ எம்பி மேலும் கூறியதாவது;

எம்.பிக்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் சிலவேளைகளில், நாட்டுக்கும், பதவிக்கும் சொந்தக்காரர்கள் ஆகி விடுகிறார்கள். உண்மையில் நாட்டுக்கும், பதவிக்கும் தாம், ஒரு போதும் சொந்தக்காரர்கள் இல்லை, தெரிவு செய்யப்பட்ட சில காலத்துக்கான குத்தகைகாரர்கள்தான் என்பது சிலருக்கு மறந்து விடுகிறது. ஆகவே தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை கண்காணிக்க நிரந்தரமாக மக்கள் சபைகள் தேவை. ஆகவே உங்கள் மக்கள் சபை என்ற பிரேரணையை வரவேற்கிறேன்.

ஆனால், மக்கள் சபை என்ற பிரேரணையை சும்மா வைத்து ஒன்றும் செய்ய முடியாது. அது நாட்டின் அரசியலமைப்பில் இடம்பெற வேண்டும். அப்போதுதான் அதற்கு சட்ட வலு கிடைக்கும். அதேபோல் இன்னமும் சில அடிப்படை விடயங்கள் நாட்டின் அரசியமைப்பில் இடம்பெற வேண்டும்.

04

# மஹிந்த, பசில் மற்றும் கப்ரால்; வெளிநாட்டு பயணத்தடைக்கு உயர் நீதிமன்றில் மனு தாக்கல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர்களான அஜித் நிவாட் கப்ரால், பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஷமன் ஆகியோரின் வெளிநாட்டு பயணங்களை தடைசெய்து உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



அதேவேளை, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டிய நபர்களுக்கெதிராக விசாரணைகளை மேற்கொள்வதற்கு உத்தரவிடுமாறும் வணிக சபையின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்ன உள்ளிட்ட தரப்பினர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை தொடர்பான மனுவுக்கு ஏற்பவே மேற்படி மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பு கூறவேண்டியவர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்வதற்கான உத்தரவை பிறப்பிக்க வேண்டுமென

04

# கொட்டாஞ்சேனையில் தம்பதியர் மீது துப்பாக்கி சூடு

## ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொழும்பு, கொட்டாஞ்சேனை புதுச்செட்டித்தெரு பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமொன்றில் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர் கொழும்பு தொட்டலங்க கிம்புலாஎல பகுதியைச் சேர்ந்த பிரதீப் என்றும் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

புதுச்செட்டித்தெரு ஹின்னிஅப்புஹாமி சந்தியில் மோட்டார் சைக்கிளொன்றில் பயணித்த தம்பதிகள் மீதே இந்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

பெண்மணி மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு அவரது கணவரை காயமடையச் செய்ததுடன் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சம்பவ இடத்திலிருந்து கைத்துப்பாக்கி

04

# ஆர்ப்பாட்டக்காரர்களுடனான பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு

## பாராளுமன்ற வட்டாரங்கள் நேற்று தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நேற்று கூடவிருந்த கட்சித் தலைவர்கள் கூட்டம் ஒத்திப்போடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் நேற்றைய தினம் நடைபெறவிருந்த பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான தெரிவுக்குழு கூட்டமும் ஆர்ப்பாட்டக்காரர்களுடனான பேச்சுவார்த்தையும் இவ்வாறு ஒத்திப்போடப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆர்ப்பாட்டக்காரர்களுடனான பேச்சுவார்த்தை நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு நடத்தப்படுவதாக நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தின் போது, நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் ஆர்ப்பாட்டக்காரர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ள பொறுப்பாளர்கள் 25 பேருடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் அந்தப் பேச்சுவார்த்தை பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# உலகளவில் விமானங்களின் கட்டணங்கள் அதிகரிக்கும்

## சர்வதேச விமான போக்குவரத்து சங்கம்

சர்வதேச அளவில் எரிபொருள் விலை உயர்வால், விமான டிக்கெட் விலை கணிசமாக உயரும் என சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம் எச்சரித்துள்ளது.

சங்கத்தின் தலைமை இயக்குனர் வில்லி வால்ஷ், உக்ரைன் ரஷ்யா நெருக்கடி இன்னும் முடிவுக்கு வராததும் இதற்கு ஒரு காரணம் எனச் சுட்டிக்காட்டுகிறார்.

சில மாதங்களில் வடக்கு அரைக்கோளத்தில் குளிர்காலம் வருவதால், விமான டிக்கெட் விலை கணிசமாக அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிடுகிறார்.

இதனிடையே, உலகின் பல நாடுகளிலுள்ள விமான நிலையங்களில்




விமானங்கள் இரத்துசெய்யப்படுவது அதிகரிக்கும் என்று வில்லி வால்ஷ் கணித்துள்ளார். போதிய எரிபொருளைக் கொள்வனவு செய்ய முடியாமையே இதற்கான காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மன்னார் இலுப்பைக்கடவையில் 203 கிலோ கஞ்சா பொதிகள் மீட்பு

**மன்னார் குறூப் நிருபர்**



மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இலுப்பைக் கடவை பகுதியில் சுமார் 203 கிலோ கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

முழங்காவில் கடற்படை முகாம் அதிகாரிகளால் நேற்று முன்தினம் (11) திங்கட்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகத்துக்கிடமான படகொன்றை சோதனைக்குட்படுத்திய போது அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர். சம்பவம் தொடர்பில் வெள்ளாங்குளம் பகுதியை சேர்ந்த 45 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலுப்பைக்கடவை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

*கர்ப்பிணி தாய்மார்களுக்காக*

# எரிபொருள் விநியோகிக்க பேருவளையில் விசேட ஏற்பாடு

**பேருவளை நிருபர்**

பேருவளை ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கும், வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கும் கியூ வரிசையின்றி நேற்று முன்தினம்(11) எரிபொருள் பகிர்ந்தளிக்கப்பட்டது.

வாகனங்களினதும், மோட்டார் சைக்கிள்களினதும் உரிமையாளர்கள் தமது வாகனங்களுக்கு எரிபொருள் பெற்றுக் கொள்ள பல நாட்களாக நீண்ட கியூ வரிசையில் காத்திருந்தபோதும் மனிதாபிமான அடிப்படையில் பேருவளை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து இவர்களுக்கு கியூ வரிசையின்றி எரிபொருளை பெற்றுக் கொடுக்க உதவி செய்துள்ளனர்.

சிகிச்சைக்காக செல்லும் கர்ப்பிணி தாய்மார்கள், வெளிநாடுகளில் இருந்து எமது நாட்டுக்கு வந்துள்ள வெளிநாட்டவர்களுக்கு இவ்வாறு எரிபொருள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. எரிபொருள் நிரப்புநிலைய முகாமையாளர், பொலிஸார், இராணுவத்தினருக்கு இது குறித்து அவர்கள் நன்றி தெரிவித்தனர்.

# ரணிலை புதிய இடைக்கால ஜனாதிபதியாக்க SLPPயில் பல குழுக்கள் தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ரணில் விக்கிரமசிங்கவை புதிய இடைக்கால ஜனாதிபதியாக்குவதற்கு பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான குழுக்கள் தீர்மானித்துள்ளதுடன் அதற்கான ஆதரவையும் வெளியிட்டுள்ளன.

பொதுஜன பெரமுனவிலிருந்து சுயாதீனமாக

செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இடைக்கால அரசாங்கத்தின் ஜனாதிபதியாக வருவதற்கு முற்படுவாராயின் அவ்வாறான வேட்பாளருக்கு ஆதரவளிப்பதில்லையென்றும் அந்தக் குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் நடவடிக்கைகள் மேற்படி குழுவினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுவதுடன் பொதுஜன பெரமுன

பாராளுமன்ற குழுக்களிடையே தற்போது ஏற்பட்டுள்ள பிளவு காரணமாக முன்னாள்அமைச்சர் டளஸ் அழகப்பெருமவை ஜனாதிபதியாக்குவதற்கு சில குழுவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் அவ்வாறு இடம்பெற்றால் அவரைத் தோற்கடிப்பதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.26 | 249.70 |
| கனடியன் டொலர் | 272.87 | 285.03 |
| யூரோ | 356.13 | 370.70 |
| ஜப்பான் யென் | 2.5880 | 2.6672 |
| சிங்கப்பூர் டொலர் | 252.47 | 263.04 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 422.05 | 439.09 |
| சுவிஸ் பிராங்க் | 361.49 | 377.54 |
| அமெரிக்க டொலர் | 356.95 | 368.30 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 957.26 | கட்டார் ரியால் | 98.28 |
| குவைத் டினார் | 1,172.49 | சவூதி ரியால் | 96.13 |
| ஓமான் ரியால் | 937.40 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.25 |

# கொழும்பில் நேற்று 75,000 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் பகிர்ந்தளிப்பு

## ஏனைய மாவட்டங்களுக்கு இன்று விநியோகம் ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சமையல் எரிவாயு விநியோக நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்றைய தினம் கொழும்பின் பல பிரதேசங்களுக்கும் 75,000 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மாடி வீட்டுத் தொகுதிகளுக்கு நேற்று பெரும்பாலான சமையல் எரிவாயு சிலிண்டர்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் வி.கோணேஸ்வரன் தெரிவித்துள்ளார். வெளி மாவட்டங்களுக்கு இன்றைய தினம் சமையல் எரிவாயு விநியோகம் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நேற்றைய தினம் கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் எரிபொருள் கொளவனவுக்காக நீண்ட வரிசைகள் காணப்பட்டன.

கடந்த ஒரு மாத காலத்திற்குப் பின்னர் நேற்றைய தினம் பெருமளவு சமையல் எரிவாயு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மற்றுமொரு கப்பல் நாட்டை...

நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எரிவாயுவின் தரம் தொடர்பான சோதனை பணிகள் நிறைவடைந்தவுடன் உடனடியாக இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அத்துடன் எதிர்காலத்தில் மேலும் பல எரிவாயு கப்பல்கள் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## விமான நிலையத்தின்...

இலங்கை குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ நாட்டிலிருந்து வெளியேற முயன்றார் என்ற தகவல்களையடுத்து நேற்று தமது எல்லை கட்டுப்பாட்டு அதிகாரிகள் விலகியுள்ளதாக இலங்கை குடிவரவு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் கே.ஏ.ஏ.எஸ்.கனுகல தினகரனுக்குத் தெரிவித்தார். முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ நாட்டிலிருந்து முக்கிய பிரமுகர்களுக்கான பகுதி ஊடாக வெளியேற முயன்றார்.

எனினும் குடிவரவு,குடியகல்வு துறை அதிகாரிகள் அவரின் ஆவணங்களை கையாள மறுத்ததால் அவர் திரும்பிச்செல்லவேண்டிய நிலையும் நேற்று ஏற்பட்டது.

## 09 வயது தங்கையை...

கொள்ள முயன்ற சம்பவம் ஒன்று கோனாபீனுவல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

13 வயதான அக்கா தற்கொலை செய்யப்போவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் உடனடியாக மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக அக்காவும் தங்கையும் பாதுகாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தகவல் கிடைத்தவுடன் விரைவாக செயற்பட்டுள்ள பொலிஸார் சம்பந்தப்பட்ட சகோதரிகளின் வீட்டுக்குச் சென்று இருவரையும் பொறுப்பேற்று பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சிறுமிகளின் தாயார் நான்கு வருடங்களுக்கு முன் வெளிநாட்டுக்குச்சென்றுள்ளார். மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வந்த அவர்களின் தந்தையும் பிள்ளைகளை விட்டுவிட்டு ஒன்றரை மாதங்களுக்கு முன் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் மேற்படி சகோதரிகள் வாழ்ந்துள்ள நிலையில் தங்கையை பாதுகாக்க முடியாததால் தாம் தற்கொலைக்கு முயற்சித்ததாக மூத்த சகோதரி கடிதம் ஒன்றை எழுதி வைத்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இரு சகோதரிகளும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபின் நீதிமன்ற உத்தரவிற்கு இணங்க பொருத்தமான பாதுகாவலர்களிடம் அவர்களை ஒப்படைப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பொருட்களுக்கு சேதம், திருட்டு...

உபகரணங்கள் பாரியளவில் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 09 ம் திகதி மேற்படி கட்டடங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டதன் பின்னர் அக்கட்டடங்கள் தற்போது பொது மக்களின் பார்வைக்காக திறந்து விடப்பட்டுள்ளதுடன் அன்றாடம் பெருமளவிலான மக்கள் அதனைப் பார்வையிட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை அலரி மாளிகையிலிருந்து அங்கிருந்த ஊடகப்பிரிவிலுள்ள உபகரணங்கள் பல களவாடப்பட்டும் சேதப்படுத்தப்பட்டும் உள்ளதாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரண்டு மடிக்கணினிகள் வீடியோ கமரா ஒன்று மற்றும் கமரா ஒன்றும் உபகரணங்கள் சிலவும் இவ்வாறு களவாடப்பட்டுள்ளதாக பிரதமரின் ஊடகப்

பிரிவு கொள்ளுப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது.

அத்துடன் ஜனாதிபதி மாளிகையில் வாகன தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களின் சிலவற்றின் உதிரிப்பாகங்களும் களவாடப்பட்டுள்ளதாக அலரி மாளிகை வாகனப்பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரி கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அச்சமயம் அங்கு 20 வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும் அதன் உதிரிப்பாகங்கள் களவாடப்பட்டுள்ளமை மற்றும் ஜனாதிபதி மாளிகையின் பொருட்களுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளமை தொடர்பிலும் பொருட்கள் சில களவாடப்பட்டுள்ளமை தொடர்பிலும் அவர் பொலிஸில் முறையிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் உரிய பொருட்களின் விபரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு பரிசீலனைக்குப் பின்னரே அதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள முடியுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# எரிபொருள் பற்றாக்குறையால் இரத்தினக்கல் வியாபாரம் முடக்கம்

**(பேருவளை விசேட நிருபர்)**

பேருவளை பகுதியிலிருந்து இரத்தினக்கல் வர்த்தக நடவடிக்கைகளுக்காக இரத்தினபுரி, நிவிதித்திகலை, பலாங்கொடை, பெல்மதுளை, கஹவத்தை போன்ற பிரதேசங்களுக்கு சென்ற இரத்தினக் கல் வர்த்தகர்கள் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மீண்டும் தமது வீடுகளுக்கு திரும்ப முடியாத நிலையில் அவ்வப்பகுதிகளில் தங்கியிருப்பதாக தெரிய வருகிறது. தமது சொந்த வாகனங்களில் எரிபொருள் பெற்றுக்கொண்டு சென்ற பல வர்த்தகர்கள் மேற்குறிப்பிட்ட இடங்களில் மீண்டும் திரும்பி வர எரிபொருள் பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையில் தொடர்ந்தும் அங்கு தங்கி நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அனுமதிப்பத்திரம் பெற்று இரத்தினக் கல் வியாபாரம் செய்வோருக்கும் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டம் ஒன்றை செயற்படுத்தினால் தமது வாகனங்களுக்கு எரிபொருளை பெற்று வியாபாரத்தை இடையூறின்றி முன்னெடுக்க முடியும் என வர்த்தகர்கள் குறிப்பிடுகின்றனர். நாட்டுக்கு அந்நிய செலாவணியை பெற்றுத்தரும் ஒரு வியாபாரமாக இரத்தினக் கல் வியாபாரம் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

## பதில் ஜனாதிபதி சபாநாயகரா?

உறுப்பினர்களில் வாக்கெடுப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க முன்வைத்த கேள்வியொன்றுக்கு சட்ட மாஅதிபர் சஞ்சய் இராஜரத்னம் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்பதாக அந்த பதவிக்கான வெற்றிடம் ஏற்பட்டால் அந்தத் தினத்திலிருந்து புதிய ஜனாதிபதி நியமிக்கப்படும் வரை அரசியலமைப்பின் 38 (1) இற்கிணங்க பிரதமர் பதில் ஜனாதிபதியாக செயற்படுவார். அதன்பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் ஜனாதிபதி பதவிக்காக ஒருவரை தெரிவுசெய்யும் வகையில் பாராளுமன்ற உறுப்பினரொருவர் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதிக வாக்குகளால் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார். அவ்வாறு நியமிக்கப்படுபவர் ஜனாதிபதியின் பதவிக்காலத்தில் மீதமான காலத்திற்கு மட்டும் அந்தப் பதவியை வகிப்பார். அந்தத் தெரிவு பதவி வெற்றிடமாகி ஒரு மாதத்துக்குள் இடம்பெறவேண்டுமென்றும் சட்ட மாஅதிபர் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் இடம்பெறும் வாக்கெடுப்பில் பெற்றுக்கொள்ளப்படும் பெரும்பான்மையை ரணில் விக்கிரமசிங்க தற்போது ஏற்படுத்திக்கொண்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கொட்டாஞ்சேனையில் ... (03 ஆம் பக்கத் தொடர்)

வெற்று தோட்டாக்கள் இரண்டை கண்டெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். துப்பாக்கிச்சூட்டை நடத்திய நபர்கள் மற்றும் அவர்கள் எவ்வாறு அவ்விடத்திற்கு வந்தனர் என்பது தொடர்பில் இதுவரை எந்த தகவல்களும் கிடைக்கவில்லையென்றும் பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு பயணத்தடைக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படை மனுவை எதிர்வரும் 27 ஆம் திகதி விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அந்த அடிப்படை மனுவில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர்களான நிவாட் கப்ரால், பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஷமன், முன்னாள் நிதியமைச்சர் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல ஆகியோர் நீதிமன்றத்தின் அனுமதியின்றி வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்வதை தடுக்கும் வகையில் உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை, நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலை காரணமாக மேற்படி மனுவில் பிரதிவாதியாக பேரிடப்பட்டுள்ள ஜனாதிபதி எங்குள்ளார் ? என்பதை தெரிந்து கொள்வதற்கு மக்களால் முடியாதுள்ளதுடன் ஏனைய பிரதிவாதிகள் நாட்டிலிருந்து தப்பிச் செல்வதற்கு தயாராகுவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 38 கிலோ ஹெரோயினுடன் தாயும்...

எம்பிலிப்பிட்டிய பகுதியில் உள்ள வீடொன்றில் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதே இவ்வாறு கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு...

வேளை விமானநிலையத்தின் குடிவரவு குடியகல்வு பிரிவில் *Silk Route' lounge* பணியிலிருந்தவர்கள் பணிபுறக்கணிப்பு செய்ததை தொடர்ந்து பசில் ராஜபக்ச திரும்பிச் சென்றுள்ளார்.

## SLPP முக்கிய தலைவர்கள்...

புறம்பானது என அக் கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தேசிய அமைப்பாளர் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் கட்சியின் உயர்பீட தலைவர்கள் தொடர்ந்தும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு நாட்டிலேயே தங்கியிருப்பார்கள் என அக் கட்சி தெரிவித்துள்ளது.

## தமிழக முதல்வருக்கு...

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், “இன்று உடற்சோர்வு சற்று இருந்தது. பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, தனிமைப்படுத்திக் கொண்டுள்ளேன். அனைவரும் முகக் கவசம் அணிவதோடு, தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டு பாதுகாப்பாய் இருப்போம்” என பதிவிட்டுள்ளார்.

## CPCக்கு திறைசேரி ரூ.100 பில்லியன்...

நெருக்கடி நிலைமையை கருத்திற் கொண்டு மக்களுக்கு விரைவாக எரிபொருளை பெற்றுக்கொடுக்கும் வகையிலேயே இந்நிதி வழங்கப்பட்டுள்ளதாக திறைசேரியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

எரிபொருளுக்கு தேவையான டொலரோ அல்லது இலங்கை ரூபாவோ தம்வசம் கிடையாது என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அண்மையில் திறைசேரிக்கு அறிவித்திருந்தது. அத்துடன் கூட்டுத்தாபனத்திற்கு 217 பில்லியன் ரூபாவை பெற்றுத்தருமாறும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திறைசேரியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

திறைசேரி மூலம் உடனடியாக அந்தளவு பாரிய நிதித் தொகையை வழங்கமுடியாதுள்ள நிலை காணப்படுவதாகவும் மத்திய வங்கியின் மூலம் அதனை பெற்றுக்கொடுக்கும் வகையில் திறைசேரியானது மத்திய வங்கியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

அந்தவகையில் நிதிச் சபையின் அனுமதியுடன் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் கோரப்பட்டிருந்த தொகையில் முதற்கட்டமாக 100 பில்லியன் ரூபாவை வழங்குவதற்காக அத்தொகையை அச்சடிப்பதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு கிடைக்கும் வருமானத்தைவிட செலவினம் அதிகரித்துள்ளதால் திறைசேரி பெரும் சவால்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மதசார்பற்ற, சிங்கள... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்நாட்டின் இன்றைய நெருக்கடிக்கு மூல காரணம், தீர்க்கப்படாத இனப்பிரச்சினைதான். அதை தீர்க்காமல் ஒன்றும் நடக்காது. உங்கள் போராட்டம் சிங்கள போராட்டமல்ல என நினைக்கிறேன். தமிழ் போராட்டமல்ல எனவும் நினைக்கிறேன். முஸ்லிம் போராட்டமல்ல எனவும் நினைக்கிறேன். அது சிங்கள, தமிழ், முஸ்லிம் போராட்டம் என நினைக்கிறேன்.

இந்த கருத்தும், போராட்டக்களத்தில் இருந்தால் போதாது. அதுவும் நாட்டின் அரசியமைப்பில் இடம்பெற வேண்டும். இந்நாடு சிங்கள, தமிழ், முஸ்லிம், நாடு என்பதும், மதசார்பற்ற நாடு என்பதும் நாட்டின் அரசியமைப்பில் சட்டப்படி இடம்பெற வேண்டும்.

இந்நாடு ஒரு இனத்துக்கும், மதத்துக்கும் மாத்திரம் வரையறை படுத்தப்படக்கூடாது. இந்நாடு சிங்கள, தமிழ், முஸ்லிம், நாடாக அரசியலமைப்பில் கூறப்பட வேண்டும். மதசார்பற்ற நாடாக அரசியலமைப்பில் கூறப்பட வேண்டும். அப்போதுதான் இவற்றுக்கு சட்ட வலு கிடைக்கும். இது எமது போராட்டம் என்றார்.

## திடீர் சுகவீனமுற்று மரணம்...

ஜயதிஸ்ஸ பெரேரா என்ற 64 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றைய தினம் காலை கொட்டாவைக்கு பௌத்த மத வழிபாட்டுக்கான பொருட்களை கொள்வனவு செய்ய வந்த போது இவர் திடீர் சுகயீனமுற்றுள்ளார்.

உடனடியாக அவரது மகன் தனது காரில் ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று அனுமதித்த போதும் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பிரேத பரிசோதனை ஹோமாகம மரண விசாரணை அதிகாரி சிந்தக உதயகுமாரவினால் நடத்தப்பட்டது. கொட்டாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மீளக்கட்டியெழுப்ப சஜித்...

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

பாராளுமன்றம் மூலம் ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்வதற்காக வேட்புமனு தாக்கல் நடைபெற உள்ளது.வெற்றிடமான ஜனாதிபதி பதவிக்கு சஜித் பிரேமதாசவின் பெயரை முன்மொழிய ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் ஜனாதிபதி பதவிக்கு சஜித் பிரேமதாசவை முன்னிறுத்துவதற்கு எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## வன்முறைகளிலிருந்து விலகி...

இயங்குகின்றன என்பதையும், வன்முறையின் விளைவாக பாரிய உயிரிழப்புகள் ஏற்பட்டால், மருத்துவமனைச் சேவைகளால் அவற்றைக் கையாள முடியாதென்பதையும் நாங்கள் மேலும் வலியுறுத்த விரும்புகிறோமென்றும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கையிலுள்ள மருத்துவர்களின் உச்ச மற்றும் பிரதான அமைப்பான இலங்கை மருத்துவ சங்கம் (SLMA), நாட்டில் தற்போது நிலவும் அரசியல் ஸ்திரமின்மை குறித்து மிகுந்த கவலை கொண்டுள்ளது.

பல தசாப்தங்களாக நமது நாட்டின் மோசமான நிர்வாகத்தால் நமது மக்கள் அனுபவித்த துயரமான துன்பங்கள் மிக அதிகமானது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எஞ்சியிருக்கும் அமைச்சரவை அமைச்சர்கள் உடனடியாக இராஜினாமா செய்து ஆட்சியை ஒப்படைக்க வேண்டுமென்ற நாட்டின் மக்கள், கல்வியாளர்கள், புத்திஜீவிகள் மற்றும் தொழில்சார் அமைப்புகளின் ஒரே மாதிரியான கூக்குரலுக்கு செவிசாய்ப்பது அரசாங்கத்தின் முக்கிய மற்றும் உடனடித் தேவையாகும்.

பொலிஸ் மற்றும் ஆயுதப் படைகள் உட்பட சம்பந்தப்பட்ட அனைவரையும் பொறுப்புடன் செயல்படுமாறும் வன்முறையில் இருந்து விலகி இருக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம். நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக வைத்தியர்கள் உட்பட பல சுகாதாரப் பணியாளர்கள் கடமைக்கு சமுகமளிக்கவில்லை.

பல மாதங்களாக இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு விரைவான தீர்வொன்றை வழங்குமாறு SLMA அதிகாரத்திலுள்ளவர்களை கோர விரும்புகிறது. சக குடிமக்களுக்காக அவர்களால் செய்யக்கூடிய மிகக்குறைந்த கடமை இதுவே என்றும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

## சுமுகமான அதிகார மாற்றம்...

தொடர்ந்தும் செயலாளர் நாயகம், உன்னிப்பாக அவதானித்து வருகின்றார் என்று ஐக்கிய நாடுகளின் செயலாளர் என்டோனியோ குட்டரஸ் சார்பாக, பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரசாங்கத்தின் சுமுகமான அதிகார மாற்றத்தை உறுதி செய்வதற்கும் பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வுகளைக் காண்பதற்கும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு அனைத்து தரப்பினருக்கும் அவர் அழைப்பு விடுப்பதாக ஹக் தெரிவித்துள்ளார்.

அனைத்து வன்முறைச் செயல்களையும் பொதுச்செயலாளர் கண்டிக்கிறார். அத்துடன் அமைதியைப் பேணுவதற்கு பொறுப்பானவர்கள் செயற்பட வேண்டும் என்றும் செயலாளர் அழைப்பு விடுக்கிறார் என்று அந்த அறிக்கை தொடர்கிறது.

இதேவேளை இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் ஆதரவளிக்க ஐக்கிய நாடுகள் சபை தயாராக உள்ளது என்று பர்ஹான் ஹக் குறிப்பிட்டுள்ளார்.

## அலரி மாளிகையில் இரு...

பெற்றதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

மோதலில் ஒரு பெண் உட்பட 10 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் தற்போது சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர்களுள் பெண்மணியும் மேலும் இருவரும் சிகிச்சைக்குப் பின் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் கழுத்துப் பகுதியில் வெட்டுக் காயங்களுடன் காணப்பட்ட நபரொருவர் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த மோதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

## புயலில் சிக்கி ஆழ்கடலில்...

அழைத்து வரப்பட்டனர்.

இலங்கையின் தென்கிழக்கு பகுதியில் ஆழ்கடலில் பாதிப்புக்குள்ளான மீன்பிடி இலுவைப்படகொன்று மிதப்பதாகவும் தேவையான உதவியை வழங்குமாறு கடற்றொழில்மற்றும்நீரியல்வளதிணைக்களத்தால் கடந்த 08ஆம் திகதி கடற்படை தலைமையகத்தில் அமைந்துள்ள கொழும்பு கடல்சார் சமுத்திர தேடல் மற்றும் மீட்பு இணைப்பு மத்திய நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டது. இந்த அறிவித்தலுக்கமைய உடனடியாக செயல்பட்ட கடற்படையினர், இலங்கை கடற் படையினரின் பராக்கிரமபாகு கடற்படை கப்பலை மீட்பு பணிக்காக அனுப்பி வைத்தது.

இக்கப்பல் ஆழ்கடல் மீன்பிடிப்படகு கடலில் புயலில் சிக்கி உள்ளதாகவும், கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டுள்ள படகில் ஆபத்தான நிலையில் 46 ஆண்கள் 03 பெண்கள் 06 சிறுவர்கள் மற்றும் 05 ஆட்கடத்தல்காரர்களை மீட்டது. அவர்களை உடனடியாக கரைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில் இந்த சட்டவிரோத குடியேற்றத்துக்கு பயன்படுத்தப்பட்ட ஆழ்கடல் மீன் பிடிபடகு புயலில் சிக்கியதும், கடல் கொந்தளிப்பு காரணமாக கப்பலுக்கு சேதம் ஏற்பட்டதால், கடல் நீர் உட்புகுந்து மூழ்கும் அபாயத்தில் இருந்ததை அவதானிக்க முடிந்துள்ளது. அதன் காரணமாக கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் பராக்கிரமபாகு கடற்படை கப்பலில் முதலுதவி மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்பட்டு ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர். விபத்தில் சிக்கிய ஆழ்கடல் இழுவை படகு கரைக்கு கொண்டுவர முடியாதவாறு பழுதடைந்திருந்தமையால் கடலிலேயே கைவிடப்படப்பட்டது.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 03 வயது தொடக்கம் 54 வயதுடைய இவர்கள் திருகோணமலை, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைதீவு யாழ்ப்பாணம் மற்றும் கற்பிட்டி ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஹம்பாந்தோட்டை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பாதுகாப்பற்ற மற்றும் பழுதடைந்த மீன்பிடி படகுகளை பயன்படுத்தி ஆட்கடத்தல்காரர்களால் திட்டமிட்டு நடத்தப்படும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் சிக்கி தமது உயிரை பணயம் வைத்து சட்டவிரோதமாக இந்நாட்டிலிருந்து வெளியேற முயற்சி செய்து சட்டத்தின் முன்னால் குற்றவாளிகளாக மாறுவதை தவிர்க்குமாறு கடற்படையினர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுகின்றனர்.

## இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து...

கடனுதவியாக பெற்றுக்கொள்வதற்கும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் நீண்டகால அரசியல் நெருக்கடி நிலைமை சர்வதேச நாணய நிதியத்தில் கடன் பெற்றுக்கொள்ளும் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்தை தாமதப்படுத்தலாமெனவும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர் செய்திச்சேவைக்கு அவர் வழங்கியுள்ள நேர்காணல் ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்காக நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் பங்கெடுத்துள்ளதாகவும் அதேவேளை இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த முடியாமல் போனால் தாம் பதவியிலிருந்து விலகுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நாம் சர்வதேச நாணய நிதியத்திடம் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றமடைவதற்கு எரிபொருள் எரிவாயு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை நீக்குவது மிக முக்கியமாகும்.

அத்துடன் மிக விரைவாக இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதும் முக்கியமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தாம் பதவியேற்றுள்ள ஆறு வருட காலங்களையும் முழுமையாக நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.




புஸல்லாவை, காச்சாமலை பஸ் விபத்து;

# பஸ்ஸுக்கு தீ வைத்தவர்களை கைது செய்யும் வரை பஸ் உரிமையாளர்கள் பணிப் புறக்கணிப்பு

தெல்தோட்டை தினகரன் நிருபர்)





புஸல்லாவை, காச்சாமலை வீடன் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த விபத்தில் இருவர் மரணமடைந்து பலர் காயமடைந்த நிலையில் விபத்துக்குள்ளான பஸ் எரியூடப்பட்டது.இதன் போது பஸ் முழுமையாக எரிந்து நாசமடைந்துள்ளது.

இச் சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பாதையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சேவையை புறக்கணித்துள்ளனர்.

இப்பாதையில் அரச போக்குவரத்து பஸ்கள் சேவையில் ஈடுபடுவதில்லை. 5 தனியார் பஸ்களே சேவையை வழங்குகின்றன.இவற்றின ஒன்றுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. தீ வைப்பு சம்பத்தில் இதுவரை யாரும் கைது செய்யப்பட்டிருக்கவில்லை.


பஸ் விபத்துக்குள்ளான சம்பவத்தில் குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்குவதை விடத்து பஸ்ஸை எரித்தது ஏற்றுக்கொள்ள முடியாத காரணமாகும்.விபத்துக்கும் பஸ்ஸுக்கு என்ன சம்பந்தம் இருக்கிறது.

விபத்திற்குள்ளான பஸ் வண்டிக்கு தீ மூட்டியவர்களை கைது செய்யும் வரையில் போக்குவரத்தில் ஈடுபடுவது இல்லை என இப்பகுதியில் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். இப் பாதையில் தனியார் பஸ்கள் மட்டுமே பயணிப்பதால் அதுவும் நிறுத்தப்பட்டுள்ளதால் தோட்ட மக்கள் மற்றும் இதர தேவைகளுக்காக பஸ்ஸில் பயணிக்கும் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். எரிபொருள் இன்மையால் அவதிப்படும் மக்களுக்கு இவ்வாறான செயற்பாடுகளால் சொல்லொணா துயரங்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளது. விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்டு வரும் கம்பனை பொலிஸார் உடனடியாக குற்றவாளிகளை கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோருகின்றனர்.

# ஜீப் வண்டி வீதியை விட்டு விலகி விபத்து

சாரதி படுகாயம்





லுணுகல நிருபர்

பசறை நமுனுகுல பிரதான வீதியில் நேற்று காலை இடம் பெற்ற பஸ்விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். பதுளை நோக்கி சென்று கொண்டிருந்த ஜீப் வண்டியொன்று கோணக்கலை புஹுல்வத்தை பாடசாலைக்கு அருகிலுள்ள பாலத்திலிருந்து பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. இதன்போது வாகன சாரதி படுகாயமடைந்துள்ளதோடு அயலவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு பசறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கொழும்பில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் பலத்த கண்டனத்தை தெரிவிக்கும் முகமாக பதுளை மாவட்ட ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் பதுளை பஸ் நிலையத்திற்கு முன்பாக பாரிய ஆர்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். (படம் : பதுளை தினகரன் விசேட நிருபர்)

# ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதி கற்பாறைகள் சரிந்து விழும் அபாயம்

தலவாக்கலை குறூப் நிருபர்



மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் கற்பாறைகள் சரிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தலவாக்கலை டெவன் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கற்பாறைகள் சரிந்து வீதியில் வீழ்ந்துள்ளன.

இதனை சீர் செய்யும் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை முன்னெடுக்கவில்லை என வாகன சாரதிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே வாகன போக்குவரத்துக்கு இடையூறாக இந்த கற்பாறைகள் பிரதான வீதியோரமாக கிடப்பதால் இதனை உடனடியாக அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வாகன சாரதிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# குடிநீரில் மாசடைவு; தொற்றுநோய் பரவும் அபாயம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)



குடிநீரில் மனித மற்றும் ஏனைய பிராணிகளின் கழிவுப்பொருட்கள் சேர்வதால் கொடக்கவெல பிரதேச மக்கள் அசுத்தமான குடிநீரை அருந்தக் கூடிய நிலைமை உருவாகியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் செயற்படுத்தப்பட்டு வரும் பெரும்பாலான குடிநீர்த்திட்டங்களின் நிலைமை இவ்வாறு காணப்படுவதாகவும் சுத்தமான நீரூற்றுக்கள் நீர்நிலைகளிலிருந்து வரும் நீர் இடையில் மனித செயற்பாடுகள் காரணமாக அசுத்தமடைவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் இதனை சுத்திகரித்து விநியோகிக்க வேண்டிய கட்டாய நிலை நிலவுகின்ற போதிலும் அப்பணிகள் இடம்பெறாமையால் பொது மக்கள் பல்வேறு நோய்களுக்கு உள்ளாகும் அவதானம் நிலவுவதாகவும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி குடிநீர்த்திட்டங்களில் இருந்து பெறப்பட்ட நீரில் பரிசோதனைகள் நடத்தப்பட்ட போது இவற்றில் ஈ, கொலய் பற்றீரியா எனும் மனித மற்றும் பிராணிகளின் கழிவுப் பொருட்கள் கலந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக இப்பகுதி சுகாதாரத் தரப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

# நாவலப்பிட்டி கதிரேசன் ஆரம்ப பாடசாலையில் திருட்டு

(தெல்தோட்டை தினகரன் நிருபர்)



கம்பளை கல்வி வலயத்துக்குட்பட்ட நாவலப்பிட்டி கதிரேசன் மாதிரி ஆரம்ப பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று திருட்டு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. அதிபர், உப அதிபர் காரியாலயங்கள் உடைக்கப்பட்டு அங்கிருந்த உடமைகள் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பாக நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து நாவலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். பொலிஸ் மோப்பநாய்கள் கொண்டுவரப்பட்டு சந்தேகநபர்களை கைதுசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் அது பயன்தரவில்லை.



ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேவின் மறைவிற்கு, இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டாமான் ஜப்பானிய தூதரகத்திலுள்ள இரங்கல் புத்தகத்தில் அனுதாபத்தை பதிவிட்டார்.

# ஹெரோயினுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

எம்பிலிப்பிடிய பிரதேசத்தில் பெரும் தொகையான ஹெரோயினை வைத்திருந்த சந்தேக நபர்கள் நால்வர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்று தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பொதிகளாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 38 கிலோ 308 கிராம் ஹெரோயினை பொலிஸார் மீட்டுள்ளனர்.

போதைப்பொருள் வியாபாரம் தொடர்பில் பிரதான சந்தேக நபர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர்களுடன் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் தொகை தொடரப்படும் வழக்கின் சான்றுப் பொருளாக சமர்ப்பிக்கப்படும் எனவும் விசாரணை நடத்தி வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

# நாய்களைப் பராமரிக்க வருடாந்தம் 600 மில்லியன் ரூபா செலவு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

நாட்டில் 24 இலட்சம் நாய்கள் காணப்படுவதாகவும் இவற்றின் உயிர்காப்பு மற்றும் நலன்களுக்காக 600 மில்லியன் ரூபாய் வருடாந்தம் செலவு செய்யப்படுவதாகவும் ஜீவகாருண்ய அமைப்புக்கள் கவலை தெரிவிக்கின்றன.

வளர்ப்பு மற்றும் கட்டாக்காலி நாய்களின் நாய்க்கடி பாதிப்புக்களுக்கு உள்ளாவதை தவிர்க்க ஒரே வழி நாய்களுக்கு தடுப்பூசி வழங்குவதாகும் எனவும் இவ்வமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

மேற்படி திட்டத்தின் கீழ் நாய்களுக்கு தடுப்பூசி வழங்குதல் நாய் இனப்பெருக்கத்தை தவிர்த்தல் போன்ற விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.இதற்கிணங்க பிரதேச செயலகப் பிரிவு ஊடாக இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் நடமாடும் தடுப்பூசி சேவை நடத்தப்படும். கட்டாக்காலி நாய்களுக்கு உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் உதவியுடன் அவற்றுக்கு தடுப்பூசி வழங்கப்படல், நாய்களின் இனப் பெருக்கத்தை கட்டுப்படுத்த அவற்றின் நோய்களுக்கான சிகிச்சை வழங்குதல் போன்ற விடயங்கள் இரத்தினபுரி மாவட்ட சுகாதார காரியாலய தகவல் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஹெரோயினுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

எம்பிலிப்பிடிய பிரதேசத்தில் பெரும் தொகையான ஹெரோயினை வைத்திருந்த சந்தேக நபர்கள் நால்வர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்று தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பொதிகளாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 38 கிலோ 308 கிராம் ஹெரோயினை பொலிஸார் மீட்டுள்ளனர்.

போதைப்பொருள் வியாபாரம் தொடர்பில் பிரதான சந்தேக நபர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர்களுடன் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் தொகை தொடரப்படும் வழக்கின் சான்றுப் பொருளாக சமர்ப்பிக்கப்படும் எனவும் விசாரணை நடத்தி வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மத்திய மாகாணத்தில் சைக்கிள் பாவனையை பிரபலப்படுத்த விசேட வேலைத்திட்டம்

(அக்குறணை குறூப் நிருபர்)



மத்திய மாகாகணத்தில் சைக்கிள் பாவனையை அதிகரிக்கும் முகமாக விசேட வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவின் வழிகாட்டலின் கீழ் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சைக்கிள்கள் போன்றவற்றை போக்குவரத்து சாதனமாகப் பயன்படுத்துவதன் மூலம், மக்களின் உடல் நலம், மற்றும் மனநலனை மேம்படுத்தலாம் என்பது பற்றி கூடுதல் விளக்கமளிக்கப்பட்டு வருகிறது.

தினகரன் THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் ஆனி மாதம் 29ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 13

## குறள் தரும் சிந்தனை



உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து

அச்சாணி சிறியது எனினும் உருளுகின்ற பெரிய தேருக்கு அது உதவுவது போல, மன உறுதி உடையவர்கள் வடிவத்தால் சிறியர் எனினும் செயலால் பெரியர் என்பதால் அவரை இகழக் கூடாது

# உணவுப் பயிர்ச் செய்கையில் துரிதமாக ஈடுபடுவது அவசியம்

நாட்டில் தொற்றாநோய்களுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதற்கு உணவுப் பயிர்ச்செய்கையில் செயற்கைப் பசளை பயன்பாடு அதிகரிப்பே காரணம் எனச் சுட்டிக்காட்டப்பட்டு வரும் சூழலில், இயற்கைப் பசளை பயன்பாட்டை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. அதற்கேற்ப 2020 நடுப்பகுதி முதல் செயற்கைப் பசளை இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டது. இதன் ஊடாக செயற்கைப் பசளை இறக்குமதிக்கென பெருந்தொகை அந்நிய செலாவணி செலவிடப்படுவதைத் தவிர்க்கவும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்நாட்டு விவசாயிகளை இயற்கைப் பசளை பாவனைக்கு ஊக்குவிக்கும் நோக்கில் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டாலும், விவசாயிகளில் பெரும் பகுதியினர் செயற்கைப் பசளைப் பயன்பாட்டுக்கே பழக்கப்பட்டவர்களாவர். அதனால் அவர்கள் இத்திட்டத்திற்கு ஆட்சேபனை தெரிவித்ததோடு, செயற்கைப் பசளை கோரி நாட்டின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தினர். இருந்த போதிலும், இயற்கைப் பசளைப் பயன்பாட்டை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் ஜனாதிபதியும் விவசாய அமைச்சரும் உறுதியாக இருந்தனர்.

'இது நல்லதொரு திட்டமான போதிலும் பல தசாப்தங்களாக பயன்பாட்டில் இருக்கும் செயற்கைப் பசளை பயன்பாட்டை எடுத்த எடுப்பிலேயே முழுமையாக நிறுத்தி விட முடியாது. கட்டம் கட்டமாகவே இயற்கைப் பசளை பயன்பாட்டை விவசாயிகள் மத்தியில் அறிமுகப்படுத்தி ஊக்குவிக்க வேண்டும்' என்று பல தரப்பினரும் குறிப்பாக விவசாயத் துறை புத்திஜீவிகளும் கூட குறிப்பிட்டனர்.

இருந்த போதிலும் செயற்கைப் பசளை இறக்குமதி இடைநிறுத்தப்பட்டதோடு, விவசாயிகளில் பலர் உணவுப் பயிரச்செய்கையில் ஈடுபடுவதை நிறுத்திக் கொண்டுள்ளனர். குறிப்பாக நெற்செய்கையாளர்கள் பெரும்போகம், சிறுபோகம் மற்றும் இடைப்போகச் செய்கையில் ஈடுபடுவதைக் கைவிட்டுள்ளனர். ஏனென்றால் செயற்கைப் பசளைப் பயன்பாட்டின் மூலம் கிடைக்கக் கூடிய விளைச்சலை இயற்கைப் பசளைப் பயன்பாட்டின் மூலம் பெற முடியாது என்பதே அவர்களது கருத்தாகும். இந்நிலையில் விவசாயிகளில் பலர் உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொண்டுள்ளனர்.

இதன் விளைவாக இந்நாட்டுக்குத் தேவையான அரிசி உள்ளிட்ட உணவுகளை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக பெருந்தொகை அந்நிய செலாவணியைச் செலவிட வேண்டிய நிலைக்கும் முகம் கொடுக்க நேரிடுகின்றது.

நாட்டில் ஏற்கனவே ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கும் அதனைத் தொடர்ந்து உருவாகியுள்ள அரசியல் கொதிநிலைக்கு அந்நிய செலாவணி பற்றாக்குறையே காரணமாக உள்ளது. இந்த நிலையில் நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படக் கூடிய அச்சுறுத்தல் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இவ்விடயத்தில் கவனம் செலுத்தி செயற்கைப் பசளையை இறக்குமதி செய்வதற்குரிய நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டன. அதற்கமைய இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் 60 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா செய்கைப் பசளையை முதற்கட்டமாக இறக்குதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த வகையில் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ள செயற்கைப் பசளையின் முதலாவது தொகுதியை இந்தியாவின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர், விவசாய அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்துள்ளார்.

இப்பசளைத் தொகுதியைக் கையேற்ற விவசாய அமைச்சர், அதனை விவசாயிகளுக்கு வழங்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இது பெரிதும் பாராட்டப்பட வேண்டிய நடவடிக்கையாகும். என்றாலும் சிலர், "இப்போது செயற்கைப் பசளையை வழங்கி விட்டு உடனடியாகப் பிரதிபலனை எதிர்பார்க்க முடியாது" என்றும் இன்னும் சிலர் "பசளையின் விலை அதிகம்" என்றும் குறிப்பிடுகின்றனர்.


ஆனால் நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதைத் தவிர்ப்பதையும் இந்நாட்டு விவசாயத் துறையைப் பாதுகாப்பதையும் உணவுப் பயிர்ச் செய்கையில் விவசாயிகளை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுதான் செயற்கைப் பசளை இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது என்பதை விவசாயிகள் கருத்தில் கொள்ள வேண்டும். இந்நடவடிக்கையின் ஊடாக உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. விவசாயிகள் கோரிய செயற்கைப் பசளை தற்போது கிடைக்கப் பெற்று விட்டது. அதனால் தாமதமின்றி உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதில் விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

ஆகவே தற்போதைய சூழலில் இந்நாட்டு விவசாயிகள் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையில் விரைவாகவும் வேகமாகவும் ஈடுபடுவதானது நாட்டுக்கும் மக்களுக்கு அளிக்கும் பாரிய சேவையாகவே அமையும். இதனைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டியது அவர்கள் முன்பாக உள்ள பாரிய பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# சாத்விகப் போராட்டங்களுக்கு அக்காலத்திலேயே வித்திட்ட தமிழின தலைவர் அமரர் அமிர்தலிங்கம்

## அன்னாரின் 33 ஆம் ஆண்டு நினைவு நாள் (13.07.2022)



பொதுத்தேர்தல் 1977 ஆம் ஆண்டில் நடைபெற்ற போது தமிழர் விடுதலைக் கூட்டணி 17 ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியது மட்டுமன்றி, இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக எதிர்க்கட்சி தலைவராக ஒரு தமிழர் தெரிவாகும் வாய்ப்பும் ஏற்பட்டது. அப்பதவிக்கு அமரர் மு.சிவசிதம்பரம் அவர்களை தெரிவு செய்யும் நோக்கோடு சிலர் செயற்பட்டதை அறிந்து கொண்ட அமரர் சிவா, எதிர்கட்சித் தலைவர் பதவிக்கு பொருத்தமானவர், அமிர்தலிங்கம் அவர்களே எனத் தெரிவித்து அப்பதவிக்கு அமரர் அமிர்தலிங்கத்தின் பெயரை பிரேரித்தார்.

அமரர் அமிர்தலிங்கத்தின் தலைமையில் அமரர் சிவாவும் நானும் முழு நம்பிக்கை வைத்திருந்தோம். சிவா அவர்கள், இறக்கும் வரை அமிர் அவர்களின் பேச்சு வந்து விட்டால் அவரின் கண்கள் பனிப்பதை நான் பல தடவை பார்த்திருக்கின்றேன். தான் இறந்து அமிர் வாழ்ந்திருக்க வேண்டுமென மனம் நொந்தவர் சிவசிதம்பரம் அவர்கள்.

1956 இல் பாராளுமன்றம் சென்ற தந்தை செல்வா, அமிர்தலிங்கம், வன்னியசிங்கம் ஆகியோர் பேரினவாதிகளின் பிரஜா உரிமை சட்டத்தின் பின் இரண்டாவது இன ஒதுக்கல் சட்டமாகிய தனிச் சிங்கள சட்டத்தை எதிர்க்க வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாகினர். காலிமுகத்திடலிலே நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்திலே தன்னை தந்தையின் தலைசிறந்த தளபதியாக பணியாற்றி தனக்குள்ள தகுதியை நிரூபித்துக் காட்டினார்.

அமரர் அமிர் அவர்கள் அன்று சொல்லடியும், கல்லடியும் பட்டு இரத்தம் சொட்டச்சொட்ட இரத்தம் தோய்ந்த தனது ஆடையுடன் பாராளுமன்றம் சென்று அன்றைய விவாதத்தில் கலந்து கொண்டு கர்ச்சித்த போது, "போரில் ஏற்பட்ட வடுக்களா?" என அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா நையாண்டி செய்தமை அன்று அனைவரையும் குமுற வைத்தது.

இன்றைய போராட்டங்களுக்கு முன்னோடியாக அன்றே வித்திட்ட சாத்வீக முறையை கையாண்ட போராளிகளில் ஒருவர்தான் அமரர் அமிர். களங்கள் பல கண்ட என் அன்புச் சகோதரர் அமிர் தன்னலம் கருதாது இனத்துக்காக இறுதிவரை போராடியவர். அவர் அரசியலில் தன் குடும்பத்தையே ஒன்றுகலக்கச் செய்து பலவிதத்திலும் பல சந்தர்ப்பங்களிலும் அவமானப்படுத்தப்பட்டதும் இம்சிக்கப்பட்டதும் நாம் அறியாததல்ல.

ஒரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் சட்ட மறுப்பு போராட்டத்தில் ஈடுபட வேண்டுமென தீர்மானம். அதன் ஒரு கட்டமாக ஐந்து தொண்டர்களுடன் எம்பகுதி நீதிமன்றம் சென்று துண்டுப் பிரசுரத்தை விநியோகிப்பதன் மூலம் நீதிமன்ற நடவடிக்கைகளை குழப்பிய குற்றச்சாட்டின் பேரில் நானும் பாவை ஜெயபாலன் (தற்போதும் கட்சித் தொண்டனாக லண்டனில் செயலாற்றுகிறார்) மற்றும் ஞானராசா, துரைராஜசிங்கம் திருஞானம் ஆகியோரும் சிறைத்தண்டனை அனுபவிக்க நேர்ந்தது.

என்னை மட்டும் விசேட விமானத்தில் கொழும்புக்கு கொண்டு சென்று விட்டார்கள். தம்பிமார் ஐவரும் யாழ் கோட்டைக்குள் சிறை வைக்கப்பட்டனர். அவர்கள் விடுதலையாவதை அறிந்து அமரர் அமிர் தன் பாரியாருடன் கோட்டைக்குச் சென்று சிறை சென்ற செம்மல்களை வரவேற்க காத்திருந்தார். காருக்குள்ளே தனிமையாக சகோதரி மங்கையற்கரசி இருந்தார். ஓர் காடையர் கூட்டம் அமரரின் கார் பெனட்டில் ஏறி நின்று ஆபாச பாட்டுப்பாடி பைலா நடனமாடி அவர்களின் உள்ளத்தை புண்படுத்திய செயல் இன்றும் நினைவில் உள்ளது. பல இடங்களில் அவர்கள் அவமானப்படுத்தப்பட்டனர், அவமதிக்கப்பட்டனர்.

பாராளுமன்றத்தில் அன்னார் ஆற்றிய உரைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. கருத்துக்கள் நிறைந்த உணர்ச்சிமிக்க அவரின் உரைகளை நேரில் கேட்டு மகிழ்ந்தவர்களில் நானும் ஒருவன். எதிரிகளின் சுட்டெரிக்கும் சொல் அம்புகளை தனது பேச்சாற்றலாலும் நாவன்மையாலும் நலிந்து போகச் செய்தவர் அமரர் அமிர். அவரது உரைகளை அன்று கேட்ட சிங்களத் தலைவர்கள் சிலர் இன்றும் அமரர் அமிரை பாராட்டுவதை நான் கேட்டிருக்கின்றேன்.

முன்னைய பிரதமர்களில் ஒருவரான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறிக்கப்பட்ட போதும். 1978 ஆம் ஆண்டு புதிய அரசியல் அமைப்புச் சட்ட விவாதத்தின் போதும் புதிய பாராளுமன்ற கட்டடத் திறப்பின் போதும் அமரர் அமிர் ஆற்றிய உரைகள் எதிரிகளை தலைகுனிய வைத்த வரலாற்று முக்கியத்துவம் பெற்றவையாகும். ஈடற்ற நடமாடும் பல்கலைக் கழகமாக விளங்கிய அமரர் அமிர், அபார ஞாபக சக்தியையும் கம்பீரமான பேச்சு வன்மையையும் கொண்டிருந்தார். அவரது இராஜதந்திர அணுகுமுறையையும் பேச்சாற்றலையும் நியாயத்தன்மையும் பார்த்து பாரத பிரதமர் அமரர் அன்னை இந்திரா அவர்கள் சிறந்த இராஜதந்திரி எனப் புகழ்ந்தார் என்பது வரலாறு. தந்தை செல்வா, தலைவர்கள் அமிர் சிவா போன்றவர்களுடன் ஏக காலத்தில் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவன். அவர்களுடன் பலதரப்பட்ட கட்சிப் பணிகளில் ஈடுபட்டவன். சத்தியாக்கிரகங்கள் உண்ணாவிரதங்கள் சமபந்தி போசனங்கள், கிராம யாத்திரைகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவன் என்ற முறையில் நான் பெருமைப்பட நியாயமுண்டு.

அமிர் அமரத்துவம் அடைவதற்கு சில நாட்களுக்கு முன்பு நான் அவருடன் பிரயாணம் செய்து சென்னையில் அவரை விட்டுப் பிரியும் போது, அதுதான் நமது இறுதி சந்திப்பு என நான் கனவிலும் எண்ணவில்லை. நாம் பிரியும் போது அன்னார் எனக்கு கூறியது இன்றும் என் காதுக்குள் ஒலித்துக் கொண்டிருக்கிறது. 'சங்கரி எம்மை எது காத்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். இருப்பினும் எம்மில் சிலர் அதற்கு முகம் கொடுத்துத்தான் ஆக வேண்டும்' என்றார் அவர்.



வீ.ஆனந்தசங்கரி,
(செயலாளர் நாயகம்,
தமிழர் விடுதலைக் கூட்டணி)

# ஆங்கிலத்தில் வெளியாகிறது முருகபூபதி எழுதிய 'நடந்தாய் வாழி களனி கங்கை'

## மூத்த எழுத்தாளர் முருகபூபதிக்கு இன்று அகவை 71

இலங்கையின் பிரபல எழுத்தாளரும், மூத்த ஊடகவியலாளருமான லெட்சுமணன் முருகபூபதியின் 71 ஆவது பிறந்த தினம் இன்று 13 ஆம் திகதியாகும். அதனை முன்னிட்டு, அவர் ஏற்கனவே எழுதிய 'நடந்தாய் வாழி களனி கங்கை' என்ற நூல் 'Mystique of Kelani River' என்ற தலைப்பில் இம்மாதம் கிண்டில்(E'Book) மின்னூலாக வெளியாகின்றது.

இந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கும் எழுத்தாளர் நூர் மகரூப் முகம்மட், ஏற்கனவே எழுத்தாளர் முருகபூபதியின் சில ஆக்கங்களை மொழிபெயர்த்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நூர் மகரூப் முகம்மட், கவியரசு கண்ணதாசனின் 'வனவாசம்' நூலையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவராவார்.

'நடந்தாய் வாழி களனி கங்கை' கிழக்கிலங்கையிலிருந்து வெளியான 'அரங்கம்' இதழில் முன்னர் தொடராக வெளியாகி, கொழும்பு குமரன் பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டது. 'அரங்கம்' இதழின் ஆசிரியர் சீவகன் பூபாலரட்ணம் தனது அணிந்துரையில் இந்நூல் பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

'பார்ப்பவர் ஒவ்வொருவருக்கும் ஒரு கதை சொல்லும் ஒரு மண் கொழும்பு ஆகும். இலங்கையின் தலைநகர் என்பதற்கு அப்பால் இலங்கையின் சரித்திரத்தில் மிக முக்கியத்துவம் கொண்ட ஒரு மாநகரம் அது. இலங்கை வாழ் தமிழரைப் பொறுத்தவரையிலும் கூட அவர்களின் தாயகம் வெவ்வேறு நகரங்களாக இருந்தாலும், ஏதோ ஒரு வகையில் கடந்த காலங்களில் அவர்களின் கதையோடு இணைந்து விட்ட ஒரு ஊர் அது.


வடக்கு, கிழக்கில் இருந்தும் மலையகத்தில் இருந்தும் தலைநகர் வாழ்க்கையை நோக்கி ஓடிவருவோருக்கு கொழும்பு காண்பிக்கும் கோலங்கள் பலவாகும். ஆனால், எங்களைவிட, கொழும்புக்கு அண்மித்த நகரான நீர்கொழும்பில் பிறந்த முருகபூபதி அண்ணனுக்கு அது கொடுத்த காட்சிகள் வேறானவை. அனுபவங்கள் வேறானவை. அவற்றைக் கொண்டு கொழும்பின், அதன் அடிநாதமான களனி கங்கையின் தீரத்தில் நடந்த நிகழ்வுகளை இங்கு காவியமாக வடிக்க அவர் முயற்சித்திருக்கிறார். அவரது அனுபவம், கற்கை ஆகியன வெறுமனே வீரகேசரியை மாத்திரம் மையம் கொண்டவை அல்ல. அதனையும் கடந்து தான் பிறந்த மண்முதல் தான் இப்போது வாழும் அவுஸ்திரேலியா வரை உலகெங்கும் அவர் கண்ட அனுபவங்கள் அவரது எழுத்தில் தெரியும்.

அவரது எழுத்துநடை இலாவகமானது. எவரும் புரிந்து கொள்ளும் வகையிலான இலகுவானது. நாங்களும் பார்த்துக் கற்க வேண்டிய மொழிநடை. அதே எழுத்துநடை 'நடந்தாய் வாழி களனி கங்கை' நூலையும் அழகுபடுத்தியுள்ளது. புதுவிதமான கொழும்பை, அதன் அண்டை இடங்களை எங்களுக்கு அது அறிமுகம் செய்துள்ளது.

அந்த மண்ணில் வாழ்ந்த மக்களின் கதையை, உழைப்பை, உயர்வை, சுமையை, சோகத்தை, அழிவை, இரத்தத்தை, தன்னுள் கலந்து ஓடும் களனி கங்கை தனது தீரத்தில் பார்த்த கதை இது". இந்நூல் தற்போது Mystique of Kelani River என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் வெளியாகிறது. இதனை கிண்டிலில் பதிவேற்றுபவர் ஓவியரும் எழுத்தாளருமான கிறிஸ்டி நல்லரெத்தினம் .



நூர் மகரூப் முகம்மட் மொழிபெயர்ப்பில், Mystique of Kelani River என்ற பெயரில் மின்னூலாகின்றது




மேலதிக தகவல்களுக்கு:
chrisanz27@gmail.com
letchumananm@gmail.com

# 'வரலாற்றில் கிருஷ்ணகிரி மாவட்டம்' - நூல் வெளியீடு

## நடிகர் பொன்வண்ணன் வெளியிட்டு வைத்தார்

தமிழ்நாடு கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் ஹோஸ்டியா வளாகத்தில், இனிய நந்தவனம் பதிப்பகம் தயாரித்த அறம்கிருஷ்ணன் அவர்களின் 'வரலாற்றில் கிருஷ்ணகிரி மாவட்டம்' என்ற வரலாற்று நூல் 10.07.22 அன்று வெளியிடப்பட்டது. தொல்லியல் அறிஞர் பூங்குன்றன் (முன்னாள் தொல்லியல் துறை துணை இயக்குநர்_பணி ஓய்வு) தலைமையில் நடைபெற்ற விழாவில் திரைக்கலைஞர், ஓவியர் மற்றும் நடிகரான பொன்வண்ணன் நூலை வெளியிட, கங்கை கொண்ட சோழபுரம் மேம்பாட்டு குழுத் தலைவர் கோமகன் நூலைப் பெற்றுக் கொண்டார்.

பாவலர் அறிவுமதி நூலை வெளியிட ஓ.சூர். பி. எம் டெக் தலைவர் குமார் பெற்றுக் கொண்டார். இராகவன் நூலை வெளியிட குகன் ஹீரா பெற்றுக் கொண்டனர்.

இந்த விழாவில் வணங்காமுடி, வேல்முருகன், ஹோஸ்டியா தலைவர் குப்புசாமி, நந்தவனம் சந்திரசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர் .

பூங்குன்றன், கோமகன், அறிவுமதி, கிருஷ்ணகிரி ஆட்சியர் கோவிந்தராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். நடிகர் பொன்வண்ணன் சிறப்புரையாற்றும் போது அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

ஏற்புரை நிகழ்த்திய Rtn அறம்கிருஷ்ணன் பேசும் போது, கடந்த எட்டு ஆண்டுகளாக கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் தான் மேற்கொண்ட களப்பயணங்கள் பற்றி விரிவாக பேசினார்.

வரலாற்றைப் பாதுகாக்கும் வகையில் ஆறு கோயில்களை புனரமைத்து வருவது, பாடசாலை மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளை கொண்டு மரபு நடைகளை நடத்தியது, சிதைந்து போன வரலாற்றுத் தடயங்களை ஊர் மக்களின் உதவி கொண்டு பாதுகாப்பை ஏற்படுத்தியது போன்ற பல்வேறு செய்திகளை பற்றி அவர் பேசினார்

இந்த நிகழ்வில் ஓசூரை சேர்ந்த சுவாதி சரவணன், ஓசூர் மக்கள் சங்க தலைவர் ஸ்ரீதர் பரிமளம், பள்ளி தாளாளர் டொக்டர் சண்முகவேல,ஜெகநாதன், Rtn தர்மேஷ் பட்டேல் PDG, ஓடிட்டர் ராகவன், அரிமா ரவிவர்மா ஆகியார் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வரலாற்றுக் குழுக்களை சேர்ந்த நண்பர்களும், ஓசூர் அறம் இலக்கிய அமைப்பு, அறம் வரலாற்று ஆய்வு மையம், ஓசூர் எலைட் ரோட்டரி சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த நண்பர்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

வரவேற்புரையை அ.க. இராசு வழங்க,தொகுப்புரையை மு. பாலாஜி மற்றும் திருமதி மணிமேகலை ஆகியோர் வழங்கினர். மா.முருகுகுமரன் நன்றியுரை வழங்கினர்

விழாக் குழுவினர்களான கருமலைத் தமிழாழன், சிவந்தி அருணாசலம், பிரியன், கணபதி, மஞ்சுநாத், வே சிவக்குமார், காமராஜ், செம்பரிதி, சத்திய மூர்த்தி, சாய்ராம், ராஜேஷ், சங்கர் பாபு, வெங்டாசலபதி, கிருஷ்ணகிரி மற்றும் ஓசூரை சேர்ந்த பத்து தொலைக்காட்சி நண்பர்களுக்கும், பத்து பத்திரிகை நண்பர்களுக்கும் நினைவு பரிசு வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது.



Rtn அறம்கிருஷ்ணன்
(நூல் ஆசிரியர், தலைவர் ஓசூர் அறம் வரலாற்று ஆய்வு மையம்)

# கிழக்கின் குரல்



# கிண்ணியாவில் வைத்தியர்கள், சுகாதார ஊழியர்கள் எரிபொருள் கோரி ஆர்ப்பாட்டம்

**கிண்ணியா மத்திய நிருபர்**



கிண்ணியா பிரதேச சுகாதார ஊழியர்கள் தங்களுக்கான எரிபொருளை வழங்கக் கோரி நேற்று (12) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிண்ணியா தள வைத்தியசாலை வைத்தியர்கள், சுகாதார ஊழியர்கள் மற்றும் கிண்ணியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக ஊழியர்கள் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இவர்கள் கிண்ணியா தள வைத்தியசாலையில் இருந்து பேரணியாகச் சென்று, கிண்ணியா பிரதேச செயலகம் முன்பாக ஒன்று கூடி, தங்களுடைய எதிர்ப்பினை தெரிவித்தனர்.

கிண்ணியா பிரதேச செயலக ஊழியர்கள் எரிபொருளை பெறுவதற்கு வாரத்தில் ஒரு நாளை ஒதுக்கி இருப்பது போல, சுகாதார ஊழியர்களான எங்களுக்கும் அவ்வாறு கிழமையில் ஒரு நாளை ஒதுக்கி தர வேண்டும்.

எனவே, எங்களுக்கு எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு உரிய திட்டமொன்று வகுக்கப்படாவிட்டால் வைத்தியசாலையை இழுத்து மூட வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு நாங்கள் தள்ளப்படுவோம் என்றும் தெரிவித்தனர். இறுதியாக, இது தொடர்பாக, கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். எம். கனியிடம் மகஜர் ஒன்றும் போராட்டக்காரர்களால் கையளிக்கப்பட்டது.

# மட்டு.சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இரண்டு நாளாகவும் பணிப்பகிஷ்கரிப்பில்

**கல்குடா தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை, ஓட்டமாவடி, கோறளைப்பற்று மத்தி ஆகிய செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இரண்டாவது நாளாகவும் நேற்றும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

எரிபொருள் வழங்கப்படாமையால் கடமைகளை மேற்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்கொள்வதாகவும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எரிபொருளை வழங்குமாறு கோரியும், அத்தோடு அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களுக்குள் சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் உள்வாங்குமாறு கோரியும் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் வாழைச்சேனை, ஓட்டமாவடி, கோறளைப்பற்று மத்தி ஆகிய செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி திணைக்கள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இரண்டாவது நாளாகவும் கடமைக்கு சமுகம் வழங்காத நிலையில் சமுர்த்தி வங்கிகள், சமுர்த்தி மகா சங்கத்தின் கிளைகள் என்பன மூடிக் காணப்படுகின்றது.

# திருகோணமலை – மொறவெவ பிரதேசத்தில் கூப்பன் முறையில் எரிபொருள்

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை மொறவெவ பிரதேச மக்களுக்கு கூப்பன் மூலம் பெற்றோல் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நேற்று முதல் நாளை மறுதினம் வரை ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகள் மற்றும் கார்களை பதிவு செய்யும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் வாகன உரிமையாளர்கள் தங்களது வாகன உரிமை பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி போன்றவற்றை எடுத்துக் கொண்டு வருமாறும் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் எரிபொருள் கூப்பனை பெற்று கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் நிற்பதையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

# ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து காத்தான்குடியில் கண்டன ஆர்ப்பாட்டம்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**



கடந்த 9ம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டிற்கு முன்பாக ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையை கண்டித்து காத்தான்குடியில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர்களின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை காத்தான்குடி குட்வின் சதுக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

'வேண்டும் வேண்டும் சுதந்திரம் வேண்டும்', 'ஊடக சுதந்திரத்தை பறிக்காதே', 'அடிக்காதே அடிக்காதே ஊடகத்திற்கு அடிக்காதே', 'பிரதமர் இல்லத்தின் முன் தாக்கப்பட்ட நியூஸ் பெஸ்ட் ஊடகவியலாளருக்கு நீதி வேண்டும்', 'ஊடகத்தையும் உணர்வுகளையும் ஒடுக்க நினைக்காதே', 'ஜனநாயகத்தின் நான்காவது தூணை நசுக்க நினைக்காதே', 'ஊடக சுதந்திரத்தையும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்து' போன்ற பதாதைகளை ஏந்தியவாறும், ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தி, ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கோசங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஒரு மணித்தியாலம் முன்னெடுக்கப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர்.



எரிபொருள் பற்றாக்குறை காரணமாக அம்பாறை மாவட்டத்தில் போக்குவரத்து பொலிஸார் தமது கடமையினை துவிச்சக்கரவண்டி மூலம் மேற்கொண்டு வருகின்றனர்.

படம்: ஒலுவில் விசேட நிருபர்

# அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் போரமும் கண்டனம்

**ஒலுவில் விசேட நிருபர்**

ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை கண்டித்தும், எதிர்காலத்தில் ஊடவியலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் கோரியும் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் போரம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக போரத்தினால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 09ம் திகதியன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ இல்லம் அருகில் ஊடகவியலாளர்களின் மீது பாதுகாப்பு தரப்பினரால் மேற்கொண்ட தாக்குதல்களை எமது அமைப்பு வன்மையாகக் கண்டிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் ஊடக சுதந்திரத்திற்கும், ஜனநாயக உரிமைக்கும், தகவல் அறியும் சுதந்திரத்திற்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகவே கருதுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஊடக அடக்குமுறையை மேற்கொண்டவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும், எதிர்காலத்தில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனவும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அம்பாறை மாவட்டத்திலுள்ள

# பிரதேச செயலகங்களில் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள்

### அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன்

**ஒலுவில் விசேட நிருபர்**

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை காரணமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பொது மக்களுக்கான சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார்.

உத்தியோகத்தர்களின் வரவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு சுழற்சி முறையில் உத்தியோகத்தர்கள் வரவழைக்கப்பட்டு பொதுமக்களுக்கான அத்தியாவசிய அவசரத் தேவைகளுக்கான சேவைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண மோட்டார் வாகன திணைக்களத்தின் சேவைகள், மோட்டார் வாகன ஆணையாளர், பதிவாளர் திணைக்களம் போன்றவற்றின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதற்கான நாட்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட சேவைகளை பெறுவதற்கான தூர இடங்களிலிருந்து வரும் பொது மக்கள் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு தங்களுக்கான சேவைகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

பொதுமக்களின் நலன் கருதியும் அவர்களுக்குரிய சேவைகளை அசௌகரியம் இன்றி பெற்றுக் கொடுக்கும் நோக்கோடு ஏனைய சேவைகள் வழமை போன்று நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

# அட்டாளைச்சேனையில் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை செயலமர்வு

**பாலமுனை கிழக்கு தினகரன், திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்**

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் ”தொலஸ் மகே பஹன' வேலைத்திட்டம் 2022 செயற்திட்டத்தின் கீழ் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையினை ஊக்குவிக்கும் செயலமர்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் சாபிர் தலைமையில் நடைபெற்றது.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள உணவுப் பொருட்களின் விலையேற்றம் அதேபோன்று எதிர்காலத்தில் எதிர்கொள்ளவிருக்கும் உணவுப்பஞ்சம் போன்ற விடயங்களை கருத்திற் கொண்டு பொருளாதாரத்தினை முன்னேற்றுவதற்கான ஆலோசனைகள் இந்நிகழ்வில் கலந்து கொண்ட பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கை தொடர்பாக அதிகாரிகள் மற்றும் விவசாய போதனாசிரியர்களினால் விளக்கமளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



“ஒன்றாக நடுவோம் நாட்டைக் கட்டியெழுப்போம்” எனும் உணவுப் பயிர் உற்பத்திற்கான வேலைத்திட்டத்திற்கென சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியினால் போடப்பட்ட நாற்று மேடைகளிலிருந்து பயிர்க் கன்றுகளை சம்மாந்துறை பிரதேச மக்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (11) இடம்பெற்றது. சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபரினால் பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபாவிற்கு பயிர்க் கன்றுகள் வழங்கி வைப்பதனை படத்தில் காணலாம்.

படம்: சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்

# காலத்துக்கு ஏற்ற துவிச்சக்கர வண்டியை கண்டுபிடித்த காரைதீவு இளைஞன் தரணி





**காரைதீவு குறூப் நிருபர்**



சமகால எரிபொருள் பிரச்சினையை சமாளிக்கும் முகமாக மோட்டார் சைக்கிளுக்கு பதிலாக மோட்டார் பூட்டிய துவிச்சக்கர வண்டியை கண்டுபிடித்திருக்கின்றார் காரைதீவைச் சேர்ந்த பரமலிங்கம் தரணிதரன் என்கின்ற இளைஞன். இவர் மின்சார இலத்திரனியல் உபகரணங்களை பழுது பார்த்தல் தொழிலையும் செய்து வருகின்றார். சம்மாந்துறை நீதிமன்றத்திலும் பணியாற்றி வருபவராவார்.

துவிச்சக்கர வண்டியிலே மோட்டார் ஒன்றை பொருத்தி அதற்கான ஏனைய தொழில் நுட்ப வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்றின் பாவனையை ஒத்த இந்த கண்டுபிடிப்பை கண்டுபிடித்து இருக்கின்றார். அவரிடம் நேரடியாக தொடர்புகொண்டு கேட்டபோது, இதற்குரிய மோட்டார் இணையதளத்திலிருந்து பெற்றுக் கொண்டோம். ஒரு மோட்டோருக்கு 16 ஆயிரம் ரூபாய் செலவாகிறது.

இதைவிட இரண்டு பேட்டரிகள் 20,000 ரூபாய். அவ்வளவுதான் இதை தயாரிப்பதற்கு தேவையானவை. இந்த மோட்டார் பூட்டிய துவிச்சக்கரவண்டி நாள் ஒன்றுக்கு 60 கிலோ மீட்டர் தொடக்கம் 70 கிலோ மீட்டர் தூரம் பயணிக்க கூடியது. 40 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்கலாம்.

சிலவேளை மோட்டார் பழுதாகினால் காலால் மிதித்தும் வந்து சேரக் கூடிய கட்டமைப்பு இருக்கின்றது. ஒட்டி பொருத்தும் வேலைகளை கண்ணன் அண்ணா செய்து உதவினார்.

மேலும் நாடார் கடையில் இருந்து பழைய சிறிய மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கி அதனை வடிவமைத்து வருகிறேன்.

# முறைசாரா பெண்தொழிலாளர்களுக்கான கொள்கை திட்டமிடல்...

## ஆய்வின் பின் பெண்கள் ஒத்துழைப்பு முன்னணி பொதுச் செயலாளர் பி. லோகேஸ்வரி முன்வைப்பு

இலங்கையில் முறைசாரா தொழிலில் ஈடுபடும் பெண்கள் தொழில்துறை கட்டமைப்பில் கீழ் மட்டத்தினராகவே நோக்கப்படுகிறார்கள். இலங்கையின் சனத்தொகையில் 50 வீதமானவர்கள் பெண்களாவர். ஆனால் பெண் தொழிலாளர்களுக்கு இன்றும் அச் சமூகத்தில் அந்தஸ்து வழங்கப்படாதுள்ளது. ஆனால் பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியானது உள்ளூரில் புலம் பெயர்ந்து முறைசாரா துறைகளில் தொழில் புரியும் பெண்தொழிலாளர்களை வலுவூட்டும் செயற்பாடுகளை செய்து வருகின்றது. அந்தவகையில் பெண்கள் ஒத்துழைப்பு முன்னணி ஆசிய மன்றத்தின் பெண்கள் குரல் வேலைத்திட்ட உதவியுடன் மலையக பகுதிகளிருந்து உள்ளூரில் புலம் பெயர்ந்து முறைசாரா துறைகளில் தெழில்புரியும் பெண்தொழிலாளர்களை வலுவூட்டல் செயற் திட்டத்தை நடைமுறைபடுத்தி வருகின்றது. இத்திட்டத்தினூடாக மலையகத்திலிருந்து புலம் பெயர்ந்து தொழில்புரியும் பெண் தொழிலாளர்களை தெரிவு செய்து அவர்கள் தொடர்பான ஆய்வொன்றை மேற்கொண்டது. அவ்வாய்வின் மூலம் அப்பெண்கள் எதிர்நோக்கும் தொழில் ரீதியான பிரச்சினைகள் கண்டறியப்பட்டுள்ளன. அவ்வாய்வின் அடிப்படையில் முறைசாரா பெண்தொழிலாளர்களுக்கான கொள்கை திட்டமிடலை உருவாக்கியுள்ளது. இவ்கொள்கை திட்டமிடலை அரச அதிகாரிகள், கொள்கை வகுப்பாளார்கள் புத்திஜீவிகள் மற்றும் ஊடகவியளாளர்களுடன் பகிர்ந்து கொள்வதோடு அது தொடர்பான பிரசார நடவடிக்கையில் பெண்கள் ஒத்துழைப்பு முன்னணி ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அது தொடர்பில் பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் பொதுச் செயலாளர் பி.லோகேஸ்வரி தினகரன் பத்திரிகையுடனான கலந்துரையாடல்

**இக்பால் அலி...**

**கே:-** முறைசாராத் துறையில் பணி புரியும் பெண் தொழிலாளர் தொடர்பில்,...

**ப:-** முறைசாராப் பொருளாதாரம் என்பது அரசின் கட்டுப்பாடு, பாதுகாப்பிற்குள் வராத பல் வகைப்படுத்தப்பட்ட பொருளாதார செயற்பாடுகளாகும். முதலில் இக் கருத்தியல் சிறிய பதிவு செய்யப்படாத சுய தொழில்களை குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்டது. எனினும் இன்றளவில் பாதுகாக்கப்படாத முயற்சிகளில் தொழிலுக்கான வேதனத்தை குறிக்கும் அளவில் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்து முறைசாரா தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களில் பெரும்பாலானோர் அடிமட்ட சாதாரண தொழில்களில், வீட்டு வேலைகள் மற்றும் ஏனைய சேவைகளிலும் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

**கே:-** இதில் உங்களுடைய பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் பங்களிப்பு என்ன?

**ப:-** எமது அமைப்பு பெருந்தோட்ட மற்றும் கிராமப்புறங்களில் இருந்து முறைசாரா (ஒருங்கமைக்கப்படாத) துறையில் தொழில் புரியும் பெண்களை கவனத்தில் கொண்டுள்ளது. 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் அவர்களின் சம்மதத்துடன் இவற்றில் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். பெண்கள் ஒத்துழைப்பு முன்னணி நடைமுறைபடுத்தவிருக்கும் வேலைத்திட்டத்தில் கண்டி மாவட்டத்தின் 7 தேயிலைத் தோட்டங்களையும் மற்றும் அண்மித்துள்ள 3 கிராமங்களையும் சேர்த்து 200 பெண்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். முறைசாராத்துறை தொழில்களில் ஈடுபட்டுள்ள பெருந்தோட்ட, கிராமப்புற பெண்தொழிலாளர்கள் பிரதிநித்துவம் செய்யப்படுவதை உறுதி செய்வதே எமது அடிப்படை நோக்கமாகும்.

பெருந்தோட்டங்களில் ஏறத்தாள 50வீதத்திற்கு அதிகமானவர்கள் பெருந்தோட்டத்திற்கு வெளியில் நகர்புற மற்றும் கிராமங்களில் அடிமட்டத் தொழில்களில் நாட்கூலிகளாக பணி புரிகின்றார்கள். குறிப்பாக இளைஞர், யுவதிகள் கொழும்பு, கண்டி போன்ற பிரதான நகரங்களில் கடைகள், ஹோட்டல்கள், ஜவுலிக்கடைகள், உணவு, உறைவிடம் வழங்கு நிலையங்கள், உணவு விற்பனை சேவை நிலையங்கள், ஆடைத்தொழிற்சாலைகள், உபசரிப்புக் கூடங்கள், மசாஜ் நிலையங்கள் மற்றும் வீட்டு வேலைத்தொழிலாளர்களாக, வீதி வியாபாரிகளாக பணியாற்றுகின்றார்கள்.

நாட்டின் பொருளாதாரம் மிகப் பெரிய அளவில் முறைசாராத்துறை பெண் தொழிலாளர்களின் கடின உழைப்பைச் சார்ந்துள்ளது. இந்தப் பெண்களில் பெரும்பாலானோர் அடிமட்ட சாதாரண இயந்திர இயக்குவிப்பாளர்களாவும் விவசாயப் பண்ணைகள், கடைகள் மற்றும் உணவகங்கள் மற்றும் வீட்டுப் பணியாளர்களாகவும் பணிபுரிகின்றனர். முறைசாராதுறை பணியார்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள் குறித்த காரணிகள் சில அடையாளம் காணப்பட்டுள்ளன. முதலாளி – தொழிலாளர் உறவு பெரும்பாலும் எழுதப்படாத மற்றும் முறைசாராததாகும். தொழில்துறை உறவுகள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகள் பற்றி குறைவாகவே மதிக்கப்படுகின்றன. முறைசாரா துறையானது முறையான பொருளாதாரத்தில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டே காணப்படுகின்றது.

பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் 2021 ஆண்டு ஆய்வின்படி தோட்டப் பகுதிகளில் உள்ள முறைசாரா துறையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்து வேலை செய்யும் பெரும்பாலான பெண் தொழிலாளர்கள், கர்ப்பிணி பெண்களினால் 08 அல்லது 09 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக வேலை செய்யவோ அல்லது சிறு தேயிலைத் தோட்டங்களில் 15 – 20 கிலோ கொழுந்து நிரப்பப்பட்ட பைகளை சுமந்து செல்ல முடியாது. எனினும் அவர்கள் அத்தொழில்களை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். வேலை நேரத்தின் பின்னர் ஆண் தொழிலாளர்கள் ஓய்வெடுக்கின்றார்கள்.

அதேவேளை பெண்கள் வீடுகளிலும் இரவு நேரங்களில் வெகுநேரம் பணியாற்ற வேண்டியுள்ளதால் அவர்கள் முதுகுவலி, முழங்கால்வலி, பாதவலி போன்ற கடுமையான நோய்களுக்கு ஆளாகின்றார்கள்.

**கே:-** பெருந்தோட்டப் பிரதேசங்களில் நீங்கள் இனங்கண்ட பிரச்சினைகள் யாவை?

**ப:-** சமூக வாழ்க்கைக்கு தேவையான அத்தியாவசிய ஆவணங்கள் இன்மை மற்றும் கிராமிய முறைசாராத்துறை தொழிலாளர்களுக்கு இருப்பதை போன்ற வசதிகள் குறைந்த அளவிலேயே காணப்படுதல். அதாவது சமூக ஒருமைப்பாடு, ஒழுங்கமைப்பின்மை மற்றும் அனைத்து விடயங்களிலும் தோட்ட முகாமைத்துவத்தையே தங்கியிருக்க வேண்டிய நிலைமை போன்றவையாகும். பெண் தொழிலாளர்களுக்கு வேலைத்தளங்களிலும் வீடுகளிலும் தீர்மானம் எடுக்கும் பொறுப்புகளில் குறைந்த அளவு வகிபாகமே வழங்கப்படுகின்றது.

கற்கை, கலந்துரையாடல்களில் கலந்துக் கொண்ட பெண்களில் பெரும்பாலானோர் அவர்களின் வருமானம் நாட்கூலியை அடிப்படையாகக் கொண்டதெனவும் அவர்கள் சிறு தோட்டத்துறை, விவசாயப் பண்ணைகள், ஆடைத் தொழிற்சாலை, கடை, உணவகங்கள் மற்றும் வீட்டு வேலை போன்றவற்றில் வேதனத்தை பெறுவதாகவும் குறிப்பிட்டார்கள்.

சிரமமான வேலைப்பளு பெண் தொழிலாளர்கள் மத்தியில் காணப்படும் போது உடல், உள உளைச்சலுக்கு பிரதான காரணிகளுள் ஒன்றாகும். தொழில் தொடர்பான அழுத்தங்கள் கடந்த 510 வருடங்களுக்குள் அதிகரித்துள்ளதாக கூறினார்கள். வேலைத்தளங்களில் ஓய்வறை வசதியின்மை பெண் தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் பாரிய பிரச்சினையாக உள்ளது.

முறைசார் தொழிலாளர்களை விட முறைசாராத்துறை தொழிலாளர்கள் நோய்வாய்ப்படும் சந்தர்ப்பங்களில் அதிகபடியான இடர்களுக்குள்ளாகிறார்கள். எனினும் ஒரு சிலருக்கே சுகாதார இழப்பீடு வசதிகள் காணப்படுகின்றன. 82 விகிதமான முறைசாராத்துறை பெண் தொழிலாளர்களுக்கு சுகாதார வசதி சலுகையோ, சுகவீனமுறும் போது சம்பளத்துடன் கூடிய விடுமுறையோ, ஊழியர் சேமலாநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, வயோதிப ஓய்வூதியமோ அல்லது வேறெந்த விதமான காப்பீடோ இல்லை எனக் கூறினார்கள். நேர்முகக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயப் பண்ணைகளிலும் சிறு தேயிலைத் தோட்டங்களிலும் தொழில் செய்யும் தொழிலாளர்கள் அடிக்கடி குளவி கொட்டுக்கும், முறைசாராத்துறை பெண் தொழிலாளர்கள் முகங் கொடுக்கும் பொருளாதாரச் சுரண்டல் முறைசார்துறை பெண் தொழிலாளர்கள் முகங் கொடுக்கும் பொருளாதாரச் சுரண்டல்களை விட ஒப்பீட்டளவில் மிக மோசமானதாகும். உழைக்கும் பெண்களே குறைந்த வேதனத்திற்கு அதிக நேரம் வேலை செய்யும், சுரண்டல்களுக்கும் இலக்காகின்றார்கள்.

**கே:-** இத்தொழில் துறையில் ஈடுபடும் தொழிலாளர்கள் பற்றி மதிப்பீடுகள் செய்துள்ளீர்களா?

**ப:-** நிச்சயமாக. பங்குபற்றுனர்களில் 38.5 விகிதமான பெண்கள் முறைசாராத்துறை விவசாய அல்லது நாட் சம்பளத் தொழிலாளர்களாவர். அவர்கள் தனியார், சிறு தோட்டங்களில் தோட்ட சுத்திகரிப்பாளர்களாக, கொழுந்து பறிப்பவர்களாக, புல் வெட்டுதல் போன்ற அடிமட்ட வேலைகளில் மற்றும் காய்கறித் தோட்டங்களில், வீட்டு வேலை உதவியாளராக ஈடுபடுத்தப்படுகிறார்கள். 35 விகிதத்தினர்கள் ஆடைத் தொழிற்சாலைகளிலும், கடை, உணவகங்களிலும் வேலை செய்கிறார்கள். க.பொ.தா சாதாரண தரம் வரை படித்த இளம் பெண்களில் பலர் கண்டி, கொழும்பு போன்ற அல்லது அண்மிய நகரங்களில் ஆடைத்தொழிற்சாலைகளில் அல்லது கடைகளில் வேலை செய்வதை விரும்புகின்றார்கள். 16.5 விகிதமான பெண்கள் வீட்டு வேலைகளில் சமைத்தல் மற்றும் பிள்ளைகள், வயோதிபரை கவனிப்பவர்களாக வேலை செய்கின்றார்கள்

**கே:-** தொழில் புரியும் தொழிலாளர் எவ்வாறான மனநிலையில் இருக்கிறார்கள்,...

**ப:-** குழு கலந்துரையாடல்கள் மற்றும் நேர்காணல்களின்படி, பெரும்பாலான முறைசாரா பெண் தொழிலாளர்கள் பணியிடங்களில் நெகிழ்ச்சி தன்மையற்ற சூழ்நிலையில் வேலை செய்கிறார்கள், ஏனெனில் அவர்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் மோசமாக காணப்படுகின்றது. முறைசாராத்துறை பெண் தொழிலாளர்களின் வாழ்க்கை பல தசாப்தங்களாக மாறவில்லை. பெண் தொழிலாளர்களின் தேவைகள் மற்றும் உயரும் அபிலாஷைகளை நிறைவேற்ற சமூக நல மேம்பாடு திறனற்றதாக உள்ளது.

70வீத தொழிலாளர்கள் தங்கள் பணிச்சூழலுக்கு விரும்பாதவர்களாக உள்ளனர். முறைசாராத்துறை தொழிலாளர்கள் குறைந்த ஊதியத்தில் பணிபுரிந்தாலும் பொருளாதாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தாலும், அவர்களின் வேலை மற்றும் நலன் பாதிக்கப்படும் போது கூட அவர்கள் முடிவெடுப்பதில் பங்கேற்க வாய்ப்பில்லை. இத்தொழிலாளர்கள் மீது முதலாளிகளுக்கு நம்பிக்கை மற்றும் நம்பிக்கையின்மை பெரிய இடைவெளியை உருவாக்கியுள்ளது. இதனால் செயல்திறன் மற்றும் ஒட்டுமொத்த உற்பத்தி திறனை எதிர்மறையாக பாதிக்கிறது.

**கே:-** இப்படிப்பட்ட முறைசார்ப்பற்ற ஊழியர் உரிய வகிபாகங்கள் வழங்கப்படுவதில்லை.எனவே அவர்கள் அதிகாரமற்றவர்களாக, கணக்கில் எடுக்கப் படாதவர்களாக, வாழ்நாள் முழுவதும் ஆண்களில் அல்லது எஜமானர்களில் தங்கியிருப்பவர்களாக உருவாக்கப்பட்டுள்ளார்கள்;. வேலைத்தளங்களிலும் குடும்ப சூழலிலும் காணப்படும் சமத்துவமற்ற அதிகார உறவு முறை பால்நிலை சமத்துவமின்மைக்கான குறிகாட்டியாக அமைகின்றது. இது தொழிற் தகராறுகள், வேதனப் பிரச்சினைகள், பெண்கள்





கள் வருமானம் பற்றாக்குறை மற்றும் வறுமை நிலைக்கு ஆளாக வேண்டிய நிலைமை ஏற்படலாம் அல்லவா?

**ப:-** இக்கற்கையில் இனங்காணப்பட்ட அநேகமான பிரச்சினைகள் வறுமையுடன் தொடர்புள்ளவை என குழு கலந்துரையாடல்கள் மற்றும் நேர்காணல்களின் ஊடாக கோடிட்டுக்காட்டியுள்ளனர். சிறுவர்கள், பெண்கள் மத்தியில் காணப்படும் போசாக்கின்மை முறைசார் கல்வி குறைப்பாடு, குடும்ப தகராறுகள், பெண்களின் புலப்பெயர்தல் மற்றும் இளைஞர், யுவதிகளின் நடத்தை மாற்றம் போன்ற அனைத்தும் வருமானம் போதாமையுடன் தொடர்புடையனவாக காணப்படுகின்றன. பெரும்பாலான பெண்கள் முறைசாராத்துறையில் நாட் சம்பள அடிப்படையில் வேலைக்குச் சேர்ந்ததாக கூறினார்கள்.சில இளம் பெண்கள் ஆடைத் தொழிற்சாலையில் தொழிலை பெற்றுக் கொண்ட போதிலும் இன்றைய கொவிட் 19 தொற்றின் பின்புலத்தில் தொழிலின்மை, தொழிற் பாதுகாப்பின்மை மற்றும் பாலடிப்படையிலான நெருக்கடிகள் போன்ற சில பிரச்சினைகள் எழுந்துள்ளன.

**கே:-** இந்நிலைமையில் முதலாளி மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு இடையிலான முரண்பாடுகள் பற்றி கூறுவீர்களா?

**ப:-** பெருந்தோட்ட, கிராமப்புற முறைசாராத் துறை பெண் தொழிலாளர்கள் பிரதான அபிவிருத்தி நீரோட்டத்திலிருந்து இன்று தள்ளி வைக்கப் பட்டிருந்தாலும் ஏதோ ஒரு வகையில் பங்களிப்புச் செய்துள்ளனர். இந்த நாட்டின் பிரஜைகள் என்ற ரீதியில் அவர்கள் அனுபவிக்க உரிமைக் கொண்டுள்ள தேசிய சேவைகளை அனுபவிப்பதிலிருந்து அவர்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளார்கள். கொவிட் 19 பரவல் தொழிலாளர்களின் நிலையை மோசமடையச் செய்துள்ளது. முறைசாராத்துறை பெண் தொழிலாளர்கள் மேற்படி தொழில்களில் ஈடுபடும் அதேவேளை, சிலர் சுய தொழில்களிலும் வாய்ப்பு கிடைக்கும் போது சிறு வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார்கள். இப்பெண்கள் குடும்ப/ வீட்டுவேலைகளிலும் குறிப்பிடத்தக்களவில் பணியாற்றுகிறார்கள்.

முறைசாராத்துறை பெண் தொழிலாளர்களுக்கு வேலைத்தளங்களிலும், வீடுகளிலும் முடிவுகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள் மற்றும் முறைசாராத தொழில்களில் ஈடுபடும் பெண்கள் மீது நேரடி உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தும் சம்பவங்களாக பிரதிபலிக்கின்றன.

இது தோட்டங்களில் வசிக்கும் பெரும்பாலான பங்குபற்றுனர்கள் முகங்கொடுக்கும் பாரதூரமான பிரச்சினையாகும். பொதுப்போக்குவரத்து உரிய முறையில் பேணப்படுவதில்லை. தனியார் பேருந்து, வேன் வசதிகள் நம்பகமானவையல்ல எனவும், அத்துடன் சனநெரிசல் காணப்படுவதாக அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்பிரச்சினையால் பெண்கள் அதிலும் குறிப்பாக தோட்டங்களிலிருந்து சென்று நகரங்களிலும், கிராமங்களிலும் முறைசாராத்துறைகளில் தொழில் செய்யும் பெண்களே அதிகம் பாதிக்கப்படுவதாக குறிப்பிட்டார்கள்.

**கே:-** இப்பெண்கள் போக்குவரத்து ரீதியாக எதிர்நோக்கும் சவால்கள் பற்றி?.

**ப:-** பெண்கள் தொழிலுக்காக அருகாமையிலுள்ள நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் செல்வதற்கு முச்சக்கரவண்டிகளையே அமர்த்த வேண்டியுள்ளது. அதற்கான செலவையும் அவர்களால் தாங்கிக் கொள்ள இயலாது.பெரும்பாலான முச்சக்கர வண்டி சாரதிகளினால் இளம் சிறுமிகள், பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு ஆளாக்கப்பட்ட பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்கள். பொது பாதைகளை திருத்தி பேணுவது அரசாங்கத்தின் பொறுப்பு எனினும், இப்போது மாகாண சபைகளோ, பிரதேச சபைகளோ இதை உரிய முறையில் செய்வதில்லை என பங்குபற்றுனர்கள் குறிப்பிட்டார்கள். எனினும் பெரும்பாலான பங்குபற்றுனர்கள் அத்தகைய பொது அமைப்புகள் மீது செல்வாக்கு செலுத்தி அபிவிருத்தி வேலைகளை செய்வதில் கரிசனையற்றவர்களாக காணப்பட்டனர்.

**கே:-** உங்கள் ஆய்வில் வேறு பிரச்சினைகள் எவை இனங்காணப்பட்டன.?

**ப:-** மொழி, தொழில் தருனர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையிலான பிரச்சினைகளுள் ஒன்றாக இனங் காணப்படுவதுடன் வேலைத்தள சிறுமுரண்பாடுகளும் காரணியாகும். பங்குபற்றுனர்களின் கருத்துப்படி: குறிப்பாக பெருந் தோட்ட முறைசாராத்துறை பெண் தொழிலாளர்கள் தமிழ் பேசுபவர்கள் எனவும் வேலைத்தளங்களில் சிங்களத்தில் பேசுவதில் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் குறிப்பிட்டார்கள்.

**இது தொடர்பில் நீங்கள் என்ன பரிந்துரையை முன் வைக்க விரும்புகின்றீர்கள்?**

* முறைசாராத்துறை தொழிலாளர்களுக்கு தொழில் உரிமை/சட்டங்கள் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல்.
* பெண் தொழிலாளர்கள் தங்களின் தொழிலாளர் உரிமைகளை தொழில்துறைகளில் உறுதிப்படுத்துவதற்காக, தொழிலாளர் இயக்கங்களை வலுப்படுத்த வேண்டும்.
* வாழ்க்கைக்கேற்ப சம்பளத்தர அடிப்படையிலான வேதன முறையை அபிவிருத்தி செய்தல்.
* சட்டவரைபு மற்றும் செயற்திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.
* கடை சாப்பு சட்டம் உரியமுறையில் அமுல் செய்யப்பட வேண்டும்
* முறைசாராத்தொழில் நிறுவனங்கள் உரிய முறையில் நெறிப்படுத்தப்பட வேண்டும். தொழில் பாதுகாப்பு, சுகாதாரமான தொழிற்தளம், வாழ்க்கை சம்பளம் மற்றும் பிரசவ கால உதவி நிதி போன்றவை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* பெண்களுக்கு சுயதொழில்களில் ஆர்வமூட்டும் வகையில் தொழில் பயிற்சி, நிதி வசதிகள் வழங்கப்பட வேண்டும்.
* தொழில் நுட்பத்திறனை வளர்த்துக்கொள்வதுடன், வாகனம் ஓட்டுதல், வாகனம் பழுதுபார்த்தல், கட்டட நிர்மாணம், மின்சார கம்பியமைப்புத் தொழில்களில் ஆர்வத்தை அளிக்கும் வகையில் பெண்களுக்கு தொழில் கல்வி தொழிநுட்ப பயிற்சிகளை வழங்குதல்.
* தொழில் தருனர் ஊழியர்களுக்கிடையிலான கருத்துப் பரிமாறலை சுமுகப்படுத்தும் முகமாக தேசிய மொழிக்கொள்கை அமுல்படுத்தப்பட வேண்டும்.
* தேவையான தகவல்கள் உரிய முறையில் முறைசாராத்துறை தொழிலாளர்/ பெண்களை சென்றடையும் வகையில் திறனான சமூக ஊடக முறைகள் பேணப்பட வேண்டும் (அரச நிறுவனங்கள் பெண்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் பிரதேச செயலகங்களூடாக நடாத்தும் தொழிற்பயற்சிகள் பெருந்தோட்ட மக்களையோ, பெண்களையோ உள்வாங்கிக் கொள்வதில்லை)
* முறைசாரத்துறை பெண் தொழிலாளர்களின் மத மற்றும் கலாசார உரிமைகள் பாதுகாத்தல் மற்றும் மதிப்பளித்தல்.
* முறைசாராத்துறை தொழிலாளருக்கான சமூக பாதுகாப்பு, சுகாதார காப்பீடுத்திட்டம் அறிமுகம் செய்யப்பட வேண்டும்.
* முறைசாராத்துறை தொழிலாளர் பெண்கள் இயக்கத்திற்கான வலைப்பின்னல் ஆரம்பிக்கப்பட வேண்டும்.
* பெண்கள் வங்கி அல்லது பெண்களை வலுப்படுத்தும் அதிகாரமளிக்கும் வங்கி அமைக்கப்பட வேண்டும்.

குறிப்பிடப்பட்ட அனைத்து அம்சங்களும் முறைசாராத்துறை பெண் தொழிலாளர்களுக்கு அத்தியாவசியமானவை. எனவே இக்கொள்கைச் சுருக்கம் வாழ்க்கை மற்றும் தொழிலில் பிரச்சினைகள் தொடர்பில் கரிசனைக் கொள்ள வேண்டும்.



## NOTICE
## UNIVERSITY OF VAVUNIYA, SRI LANKA
## VACANCY FOR THE POST OF TEMPORARY POSITIONS

I. WALK IN INTERVIEW

Walk in interview for the following post will be held on 20th July 2022 at 2.00 p.m at the Board Room of the University of Vavuniya, Pambaimadu.

1. Temporary Assistant Lecturer in Tamil for Sinhala Students
2. Temporary Assistant Lecturer in Sinhala for Tamil Students

II. CALLING APPLICATIONS

Department of Physical Science, Faculty of Applied Science

Applications are invited for the following post from suitably qualified persons up to 23rd July 2022.

1. Temporary Assistant Lecturer in Applied Mathematics & Computing
2. Temporary Assistant Lecturer in Computer Science / Information Technology
3. Temporary Instructor in Computer Technology

Applicants who are interested in the above post are requested to visit University of Vavuniya Website http://www.vau.ac.lk to obtain further details.

Registrar
University of Vavuniya
12.07.2022

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் திவுலப்பிட்டிய பிரதேச சபையின் எல்லையின் 320/D/2 சுற்றுவட்ட பாதை, திவுலப்பிட்டிய என்ற முகவரியில் வசிக்கும் அற்றோணித்தத்துவ வழங்கும் உரிமையாளராகிய என்னால் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் மேல் மாகாண கம்பஹா மாவட்டத்தில் மினுவங்கொட பிரதேச செயலாளர் பிரிவின் இல. 80/B, வெவ பாதை, மாபோதள என்ற முகவரியை சார்ந்தவரும் Romania, Bucharest, 246 Gocpu Tudor Strada என்ற முகவரியில் தற்போது வசிப்பவருமான ஏக்கநாயக்க அத்து கோரரலாகே நியல் பிரியசாத் இரங்க ஏக்கநாயக்க (கடவுச்சீட்டு இல.எண் 8998271) என்பவரினால் அதிகாரம் வழங்கப்பட்டதும் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி.ஹெட்டி ஆராய்ச்சிகே நிலுக்கா சுஜீவனி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 06 ஆம் இலக்க பதிவு இலக்கத்தைக் கொண்டதும் 2021.11.15 அன்று திகதியிடப்பட்டதுமான விஷேட அற்றோணித் தத்துவமானது 2022.07.11 ஆம் திகதியிலிருந்து ஒழிக்கப்பட்டு, இரத்துச் செய்யப்பட்டு மற்றும் வெறிதாக்கப்பட்டுள்ளதென இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் அதனது பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

**அதிகாரி அப்புஹாமிலாகே கயன் இந்துநில்**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் கொட்டகஹ மற்றும் ரங்கல அரச பெருந்தோட்டங்களின் ஏலக்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படும் கொட்டகஹ மற்றும் ரங்கல அரச தோட்டங்களின் ஏலக்காய் விளைச்சலை ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இந்த கேள்விக்கான நிபந்தனைகள் மற்றும் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான படிவங்கள் உள்ளடங்கலான கேள்வி ஆவணங்களை 2000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி 2022-07-19ஆம் திகதி முதல் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் அல்லது கல்பிஹில்ல தோட்டத்தில் அமைந்துள்ள பிரதேச அலுவலகத்தில் கொள்வனவு செய்யலாம். அந்த கேள்வி ஆவணங்களை 2022-08-02ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் இலங்கை அரச பெருந்தோட்டத்தின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2022-08-02ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன்பின் உடன் திறக்கப்படும் என்பதுடன் அவைகளைத் திறக்கும் வேளையில் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

எந்தவொரு கேள்வியையும் அல்லது கேள்வியின் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் மற்றும் நிராகரிக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரத்தை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் அதன் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, மீரானியா வீதி,**
**கொழும்பு - 12.**
**2022-07-12ஆம் திகதி.**
**தொலைபேசி: 0115-921463**


சீட்டிலுக்கப்பட்ட திகதி 11.07.2022 திங்கட்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4812
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,353,160.00
அச்சிடப்பட்ட திகதி : 10.07.2022
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 2 2 0 5 8 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,987,438.40

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /07/10
சீட்டிழுப்பு இலக்கம் : 842
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 842,260.00
வெற்றி இலக்கினம் H வெற்றி இலக்கங்கள் 39 54 66 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,651,279.60

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /07/11
சீட்டிழுப்பு இலக்கம் : 843
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,121,060.00
வெற்றி இலக்கினம் E வெற்றி இலக்கங்கள் 27 32 48 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,723,994.80

கொவிசெத Govisetha
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.07.11 சீட்டிழுப்பு இலக்கம் 3055
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,143,380.00
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 42 53 61 62
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,391,525.20

கொவிசெத Govisetha
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.07.10 சீட்டிழுப்பு இலக்கம் 3054
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,831,480.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 01 09 38 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,273,145.60

ஜாதிக சம்பத
அச்சிடப்பட்ட திகதி 10.07.2022
சீட்டிழுப்பு இலக்கம் : 1290
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 724,520.00
வெற்றி இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 9 2 3 1 7 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,192,557.20

ஜாதிக சம்பத
அச்சிடப்பட்ட திகதி 11.07.2022
சீட்டிழுப்பு இலக்கம் : 1291
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 741,640.00
வெற்றி இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 9 4 7 8 7 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,222,403.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 121
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,259,360.00
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 10.07.2022
இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 06 19 24 41
விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,993,416.00

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1160
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022.07.10
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,489,520.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 260,401,330.00
P 06 37 45 69 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


## இலங்கை கொவிட் – 19 அவசரகால பதில் மற்றும் சுகாதார முறைமை தயார்நிலைத் திட்டம் – சுகாதார அமைச்சு

| | |
|---|---|
| **நாடு** | : இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு |
| **செயற்றிட்டத்தின் பெயர்** | : இலங்கை கொவிட்-19 அவசரகால பதில் மற்றும் சுகாதார முறைமை தயார்நிலைத் திட்டம், சுகாதார அமைச்சு |
| **ஒப்பந்தத் தலைப்பு** | : அங்கொட தேசிய தொற்றுநோய் (NIID) நிறுவனத்திலுள்ள உத்தேச தேசிய தனிமைப்படுத்தல் நிலையம் |
| **கடன் இல.** | : 6595-lk |
| **RFB குறிப்பீட்டிலக்கம்** | : LK-MOH-252402-CW-RFB |


**விலைமனுக்கள் வழங்கும் திகதி மற்றும் விலைமனுக்களை முடிவுறுத்தும் திகதிகளை நீடித்தல்**

1. 2022-06-25ஆம் திகதிய ''தினகரன்'', ''தினமின'' மற்றும் ''டெய்லி நியூஸ்'' பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்தின் குறிப்பு.
2. விலைமனுக்கள் வழங்கும் திகதி மற்றும் விலைமனுக்களை முடிவுறுத்தும் திகதிகள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளன.

   விலைமனுக்கள் வழங்கும் திகதி: 2022 ஜூலை 21ஆம் திகதி வரை
   விலைமனுக்கள் முடிவுறுத்தும் திகதி: 2022 ஜூலை 22ஆம் திகதி
   விலைமனுக்களைத் திறத்தல்: 2022 ஜூலை 22ஆம் திகதி
3. ஏனைய சகல விதிகள் மற்றும் நிபந்தனைகள் மாறாது அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு,**
**சுகாதார அமைச்சு,**
**385, சுவசிறிபாய,**
**வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,**
**கொழும்பு-10.**
**திகதி: 2022 ஜூலை 12**


BE BETTER INFORMED!
Dinamina Daily News Thinakaran
News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### வனசீவராசி மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு
### தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களம்

### 2022/2025 ஆண்டுகளுக்காக அம்பலாந்தொட்ட ரிதியகம சவாரி பூங்காவிற்கான குறுகியதூர (shuttle) பஸ் சேவைக்கான பெறுகை

**IFB No.: DNZG/A/10/22/05**

1. மூன்று வருட கால எல்லைக்கு அம்பலாந்தொட்ட சவாரி பூங்காவிற்கு குறுகிய தூர பஸ் சேவைக்கான பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை 2022 ஜூலை 13 ஆம் திகதியிலிருந்து 2022 ஒகஸ்ட் 01 ஆம் திகதி வரையும் தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
   1.1 வழங்குவதற்காகவுள்ள பஸ்கள் தொடர்பாக தேவைப்படும் ஆவணங்கள் பின்வருமாறு.
   - பஸ்களுக்கான பதிவுப் புத்தகம் அல்லது பஸ்களை வழங்குவதற்கான தகுதி.
   - கடந்த ஆறு வருடங்களில் வங்கி கூற்றுக்களுடனான நிதியிடல் நிலைமை.
